# திங்கள்


மாதாந்த சஞ்சிகை

ஆகஸ்ட் 2013

அரசாங்க தகவல் திணைக்கள வெளியீடு



# அரசாங்க தகவல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் அங்குரார்ப்பணம்



அரசாங்க தகவல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளம் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல வினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்நிகழ்வு 2012 ஜூன் 12ஆம் திகதி தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

www.dgi.gov.lk .என்ற இந்த புதிய இணையத்தளத்துக்குள் பிரவேசிப்பதன் மூலம் அரசாங்க தகவல் திணைக்களத்தின் கீழ் இயங்கும் சகல பிரிவுகள் குறித்தும் அவற்றின் நடவடிக்கைகள் குறித்தும் முழு விபரங்களையும். இந்த இணையத்தளத்தினூடாக அறிந்து கொள்ள முடியும் என தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல தெரிவித்தார்.



www.news.lk என்ற பெயரில் அரசாங்க உத்தியோகபூர்வ செய்திகளைத் தாங்கிய தமிழ் ,சிங்களம் ,ஆங்கிலம் ஆகிய மும்மொழியிலான செய்தி இணையத்தளம் ஒன்றும் ஏற்கனவே இயங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.





www.dgi.gov.lk

# திங்கள்

மாதாந்த சஞ்சிகை


**ஆலோசகர்கள்**
பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல
அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்

வசந்தப்ரிய ராமநாயக்க
தகவல் பணிப்பாளர்

**பிரதம ஆசிரியர்**
ஏ.ஹில்மி முஹம்மத்

**இணை ஆசிரியர்**
நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்

**உதவி**
எ.எஸ்.எம். மிஸ்வர்
எஸ்.பிரபா

**கணனி பக்க வடிவமைப்பு**
எம்.முஜாஹித் நிஸாருத்தீன்

**புகைப்படக் கலைஞர்கள்**
சுதத் சில்வா
சரத் தர்மசிரி
பீ.டீ. ரஞ்சித்
எல். ரோஹன
யமுனி பிரபாத்

**கணனி தட்டச்சு**
ராபிதா ரஸான்



**முகவரி**
திங்கள் ஆசிரியர் பீடம்
அரசாங்க தகவல் திணைக்களம்
163, கிருலப்பனை வீதி
கொழும்பு 05.


தொலைபேசி: 0112512423, 0112513756
ஈமெயில் thingal@gmail.com


## புதுமெருகுடன் திங்கள் !

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையிலான இன்றைய அரசு, நாட்டில் என்றுமில்லாத அளவுக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை யாவரும் அறிந்ததே. இந்த அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து மக்களை விழிப்பூட்டும் பாரிய பங்களிப்பினை எமது திணைக்களம் செய்து வருகின்றது. இதன் ஓர் அங்கமாகவே எமது இந்த திங்கள் சஞ்சிகையும் பிரசுரிக்கப்படுகிறது.

இச்சஞ்சிகை வெறுமனே அரசினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டச் செய்திகளை மட்டுமே தாங்கிவரும் சஞ்சிகையும் அல்ல. நாடளாவிய ரீதியில் எழுத்தாளர்களுக்கும், இலக்கியவாதிகளுக்கும் களம் கொடுக்கக் காத்திருக்கிறது. எனவே உங்கள் பகுதிகளில் அரசினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், கல்வி, கலாசார நிகழ்வுகளுடன் ஆக்கங்களுக்கும் திங்களில் இடமுண்டு என்பதை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம். எனவே திங்களுக்காக உங்களின் கற்பனை படைப்புகள் சிறகடித்து பறக்கட்டும்.

புத்தொளி வீசி புதுமெருகுடன் மலரும் எமது திங்கள் சஞ்சிகையின் வாசகர் வட்டம், நாடளாவிய ரீதியில் மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியிலும் வியாபிக்கட்டும்.!



1-CM016603

03 வடமாகாணசபை பிரதிநிதிகளை தெரிவு செய்யும் சுதந்திரம் மக்களுக்கே!

05 கிளிநொச்சியை மறுமலர்ச்சி அடையச் செய்த சிவில் பாதுகாப்பு முகாம்

09 யாழ். செல்லும் யாழ்தேவி

12 எஸ்.பி. திவாரட்னவுடனான நேர்காணல்

17 நீரியல் பூங்கா தியத உயன

21 கவிதா - ஆற்றல்

24 உலகை வலம்வரும் மத்தள மயில் இறகுகள்

39 சீன மொழியில் மஹிந்த சிந்தனை

40 தாமரைக் கோபுரம்

41 தெற்கு அதிவேக நெடுஞ்சாலை

48 உயர்தரத்திற்கு புதிய பாடவிதானம்

51 ரவிநாத் ஆரியசிங்கவின் ஜெனீவா உரை

55 துப்பாக்கியை ஏந்திய கரங்கள் துடுப்பேந்தும் கரங்களாக..



# வட மாகாண சபை பிரதிநிதிகளை தெரிவு செய்யும் சுதந்திரம் அப்பகுதி மக்களுக்கே !

- ஜனாதிபதி

தென் இலங்கை மக்கள் அனுபவிக்கின்ற சகல வசதி வாய்ப்புகளும் நிச்சயமாக வடபகுதி மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும். திட்டமிட்ட படி செப்டம்பர் மாதம் வட மாகாண தேர்தல் நடத்தப்படுவதுடன் சரியான பக்கத்தை தமக்குரிய பிரதிநிதிகளும் தெரிவு செய்வதற்கான சுதந்திரத்தையும் மக்களுக்கு பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அன்று வடபகுதி மக்களின் வாழ்வை இருளாக்கிய வர்கள் இன்று மீண்டும் இருள் மயமாக்க எதிர்பார்க்கிறார்கள். தூர இருக்கும் உறவினரை விட அருகில் இருக்கும் நண்பனே சிறந்தது என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இச்சிறிய நாட்டை கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்றிணைவோம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். தென்னிலங்கை மக்கள் அனுபவிக்கின்ற சகல வசதிகளையும் நிச்சயமாக உங்களுக்கும் பெற்றுத்தருவேன் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிளிநொச்சியில் தெரிவித்தார். இரணைமடு விமான ஓடுபாதை, ஏ9 வீதி, மக்கள் வங்கியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை அலுவலகம் ஆகியவற்றை உத்தியோக பூர்வமாகத் தொடங்கி வைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முல்லைத் தீவில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கையளித்ததோடு வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் மாணவர்களுக்கான போஷாக்கு வேலைத்திட்டத்தையும் தொடக்கி வைத்தார். இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து கிளிநொச்சியில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே




ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த தொடர்ந்தும் உரையாற்றுகையில், நான் கிளிநொச்சிக்குப் பலமுறை வருகை தந்துள்ளேன். அன்று வடபகுதி மக்களின் வாழ்வை இருளாக்கியவர்கள், இன்று மீண்டும் இருள்மயமாக்க விரும்புகிறார்கள்.

இச்சிறிய நாட்டை கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்றிணைவோம். தென்னிலங்கை மக்கள் அனுபவிக்கின்ற சகல வசதிகளையும் நிச்சயமாக உங்களுக்கும் நான் ஏற்படுத்தித்தருவேன் எனத் தெரிவித்தார்.

# யாழ்.மாவட்டத்தில் 1128 ஹெக்.நிலப்பரப்பில் திராட்சை பயிர்ச்செய்கை!



யாழ். மாவட்டத்தில் தற்போது, 1128 ஹெக்டெயாரில் திராட்சை பயிரிடப் படுகின்றதாகவும் திராட்சை பழப்பயிர் மூலம் விவசாயிகள் அதிக இலாபத்தினை பெறமுடியுமென்றும் யாழ். மாவட்ட விவசாய திணைக்கள உதவிப் பணிப்பாளர் கிருஷ்ணன் சிறிபாலசுந்தரம் தெரிவித்தார்.

கடந்த 4 வருடங்களில் 300 ஹெக்டெயார் திராட்சை பயிரிடப்பட்டதாகவும், யுத்தத்தின் போது 22 ஹெக்டெயராக வீழ்ச்சி அடைந் ததாகவும் அவர் கூறினார்.

ஆனால், கடந்த காலங்களில் திராட்சை பயிர்ச்செய்கை மேம்படுத்தப்பட்டு, 175 விவசாயிகளுக்கு திராட்சை பயிர்ச் செய்கைக்கான, திராட்சைக் கொடி மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, 22 ஹெக்டெயார் ஆக இருந்த திராட்சை பயிர்ச்செய்கை 2012ஆம் ஆண்டு 102 ஹெக்டெயாராக உயர்வடைந்தது, பின்னர் அது 2013 ஜனவரி முதல் 128 ஹெக்டெயாராக அதிகரிக்கப்பட்டு பயிரிடப் படுகின்றதாகவும் அவர் கூறினார்.

1960ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட திராட்சை பயிர் உற்பத்தி இலங்கையில் யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்று வந்ததாகவும், யுத்தத்தின் பின்னர் பாரிய வீழ்ச்சியை கண்டுள்ளது.

தற்போது திராட்சை பயிர்ச்செய்கை கரவெட்டி, நெல்லியடி, உடுவில், புத்தூர், கோப்பாய், கைதடி, சண்டிலிப்பாய் போன்ற பிரதேசங்களில் பயிரிடப்படுகின்றன.

திராட்சை பயிர் செய்கை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தால் எதிர்வரும் காலங்களில் 200 ஹெக்டெயரை அடைய முடியுமென்றும் அவர் கூறினார்.

தற்போது, தீவுப் பகுதிகளில் மண்கும்பான், அனலைதீவு பிரதேசங்களில் 1000 ஹெக்டெயார் நிலப்பரப்பில் திராட்சை பயிரிடப்பட்டு வருகின்றதாகவும், உரிய முறையில் பயிரிட்டு பராமரிக்கப்பட்டு வந்தால், ஒரு தடவையில் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா இலாபத்தினை பெற முடியுமென்றும் யாழ். மாவட்ட விவசாய திணைக்கள உதவிப் பணிப்பாளர் மேலும் கூறினார்.




# கிளிநொச்சியை மறுமலர்ச்சியடையச் செய்த விஸ்வமடு சிவில் பாதுகாப்பு முகாம்!

யுத்தத்தினால் சின்னாபின்னமாகியிருந்த கிளிநொச்சி மாவட்டம் இன்று புதுப்பொலிவுடன் தோற்றமளிப்பதற்கு அம்மாவட்டத்தில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினரின் தன்னலமற்ற அர்ப்பணிப்புடனான சமூக சேவையே பிரதான காரணமாகும்.

நாம் அண்மையில் இம்மாவட்டத்திற்கு பொறுப்பான பாதுகாப்பு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவுடன் நடத்திய பேட்டியின் மூலம் இராணுவத்தினர் இம்மாவட்டத்தின் மேம்பாட்டுக்காகவும் அங்குள்ள வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்ந்து கொண்டிருக்கும் பெரும்பாலான மக்களின் நல்வாழ்வுக்காகவும் மேற்கொண்டுவரும் பணிகளைப் பற்றி அறிந்துகொண்டோம்.

ஆயுதப் படையினருக்கு உறுதுணை புரியக்கூடிய வகையில் அவர்களின் பொதுத் தொண்டனையும் மீறிவிடக்கூடிய அளவுக்கு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் விஸ்வமடு முகாமின் கட்டளைத்தளபதி லெப்டினன்ட் கேர்ணல் டபிள்யு.டபிள்யு. ரத்னபிரிய மேற்கொண்டு வரும் நற்பணிகள் அளப்பரியன.

30 ஆண்டு கால பயங்கரவாத யுத்தத்தின் கேந்திர நிலையமாக கிளிநொச்சி மாவட்டம் விளங்கியது. அதன் விஸ்வமடு பிரதேசம் எல்.ரீ.ரீ.ஈயின் மூலஸ்தளமாக இருந்து வந்தது. அங்குதான் எல்.ரீ.ரீ.ஈயின் தலைவர் பிரபாகரன் தனது பாதுகாப்பான மறைவிடத்தை நிர்மாணித்திருந்தார்.

ஷெல் வெடிகள் அல்ல, அணுகுண்டுகள் கூட தகர்க்க முடியாத அளவுக்கு 4 அடி விட்டத்தைக் கொண்ட பிரமாண்டமான சுவர்களை நிர்மாணித்து தரைக்கடியில் குளிரூட்டி உட்பட சகல இராஜபோகங்களுடன் பிரபாகரன் வாழ்ந்து வந்ததை அவ்விடத்திற்கு சென்ற போது நாம் கண்டறிந்தோம்.

30 ஆண்டுகால யுத்தத்தின் போது கிளிநொச்சி மாவட்டமும், முல்லைத்தீவு மாவட்டமும் இலங்கை இராணுவம் உட்பட ஆயுதப்படையினரின் பெரும் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தன. இதனால், கிளிநொச்சியில் வாழும் மக்கள் இந்த 30 ஆண்டு காலத்தில் ஒரே வசிப்பிடத்தில் ஓரிரு மாதங்கள் மாத்திரமே தங்கியிருக்கக்கூடியதாக இருந்தது.

யுத்தத்தின் தாக்கத்துக்கு அமைய கிளிநொச்சி மக்கள் தங்கள் உயிர்களை காப்பாற்றுவதற்காக இடம் மாறிய வண்ணம் குறவர்களைப் போன்று வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் தங்கள் குடும்பங்களைச் சேர்ந்த வயோதிபர்கள், இளம் பெண்கள், சிறு குழந்தைகள் அனைவரையும் பாதுகாப்பதற்காக எத்தனையோ நாட்கள் பயங்கர காட்டு யானைகளும், சிறுத்தைகளும், கரடிகளும், நச்சுப் பாம்புகளும் குடியிருந்த அடர்ந்த காடுகளில் மிருகங்களைப் போன்று பதுங்கி யிருந்தார்கள்.

அவர்களுக்கு உண்ண உணவோ, தாகத்தை தீர்ப்பதற்கு சுத்தமான குடிநீரோ கிடைப்பது அரிதாக இருந்தது. அத்துடன் சுகாதார வசதிகளும் இன்றி காடுகளிலேயே தங்களின் இயற்கை தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய அவல நிலையில் இருந்தார்கள்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மக்கள் எல்.ரீ.ரீ.ஈ. தலைவர்களின் உத்தரவுப்படி செயற்படும் அடிமைகளைப் போல் நடைபிணங்களாக இந்த 30 ஆண்டு காலத்தில் உயிர்வாழ்ந்தார்கள். இந்த 30 ஆண்டு காலத்தில் பிறந்த பிள்ளைகள் இப்போது அங்கு இளைஞர்களாகவும் யுவதிகளாகவும் இருக்கிறார்கள்.

இவர்களுக்கு வெளி உலகத் தொடர்பு குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் சிங்கள மக்கள் எப்படிப்பட்டவர்கள், நல்லவர்களா? கருணை உள்ளம் படைத்தவர்களா? அல்லது கொடியவர்களா? என்பது கூட தெரியவில்லை. இன்று யுத்தம் முடிவடைந்துவிட்டது. சமாதானமும் அமைதியும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மட்டுமன்றி நாடெங்கிலும் நிரந்தரமாக நிலைத்திருக்கின்றது.

எல்.ரீ.ரீ.ஈ.யினரின் கட்டுப்பாட்டிலேயே இந்த இளைஞர்களும், யுவதிகளும் யுத்தம் முடிவடையும் வரையில் இருந்தார்கள். சிங்களவர்களையும் இராணுவத்தையும் எல்.ரீ.ரீ.ஈ. தமிழர்களின் எதிரிகளாகவும் கொலைஞர்களாகவும் கொடியவர்களாகவும் சித்தரித்து தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள இளைஞர், யுவதிகளை சிங்களவர்களைப் பூண்டோடு அழிக்க வேண்டுமென்ற உணர்வோடு இயந்திர மனிதர்களாக உருவாக்குவதில் எல்.ரீ.ரீ.ஈ. இயக்கம் ஒரு விதத்தில் வெற்றி கண்டது.

அதனால் தான் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் தங்கள் உயிரைப் போக்கினாலும் எதிரிகளான சிங்களவர்களையும் இராணுவத்தினரையும் அழிக்க வேண்டுமென்ற வெறியுடன் தற்கொலை குண்டுதாரிகளாக மாறினார்கள். தற்கொலை குண்டுதாரிகளான இந்த இளைஞர்கள், யுவதிகளின் பெரும்பாலானோர் நல்ல கண்ணியமான குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இதனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பெரும்பாலான இளைஞர்களும் யுவதிகளும் யுத்த காலத்தில் மாண்டு போனார்கள்.









இன்று தெய்வாதீனமாக உயிர்த்தப்பியிருக்கும் இளைஞர்களும், யுவதிகளும் வறுமையில் துவண்டு கொண்டு இருக்கிறார்கள்.

இவர்களுக்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்போ வெளிநாடுகளில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் குரல் கொடுக்கும் அரச சார்பற்ற அமைப்புகளோ, புலம்பெயர்ந்த தமிழர்களோ எவ்வித உதவியும் செய்யவில்லை. வெளிநாடுகளில் இலங்கைத் தமிழர்களைப் பற்றிப் பேசி டொலர் நோட்டுகளை வாங்கி தங்கள் பைகளில் போட்டுவிடுவதில் மாத்திரமே வெளிநாடுகளில் தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் அரச சார்பற்ற அமைப்புகளும், புலம்பெயர்ந்த தமிழர்களும் சிரத்தையுடன் செயற்படுகிறார்கள் என்பதை நாம் வேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் இராணுவத்தினர் இப்பிரதேச மக்களின் நல்வாழ்வுக்காக எவ்வளவோ நற்பணிகளை செய்கிறார்கள். எல்.ரீ.ரீ.ஈ யுடன் சம்பந்தப்பட்ட பல இளம் பெண்கள் இராணுவ பெண்கள் படையில் இப்போது சேர்க்கப்பட்டுள்ளார்கள். அது போன்று சிவில் பாதுகாப்பு திணைக்களமும் அவ்விதம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இந்த மக்களின் வாழ்க்கையை மறுமலர்ச்சி அடைவதற்கு மகத்தான தொண்டுகளை செய்து வருகின்றது.

விஸ்வமடு சிவில் பாதுகாப்பு திணைக்கள முகாமின் கட்டளைத்தளபதி லெப்டினனட் கேர்ணல் டபிள்யு.டபிள்யு. ரத்னபிரிய இந்த தன்னலமற்ற சேவையை மிகவும் உன்னதமான முறையில் செய்து வருகிறார். இவரது நிர்வாகத்தின் கீழ் பணியாற்றுவதற்கு இதுவரையில் 3,500 இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடாக தொழில்வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஒவ்வொருவருக்கும் 23,000ரூபா மாத சம்பளம் கொடுக்கப்படுகிறது.

விஸ்வமடு சிவில் பாதுகாப்பு முகாமின் கீழ் லெப்டினன்ட் கேர்ணல் டபிள்யு.டபிள்யு. ரத்னபிரிய 12 பண்ணைகளை கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்துகின்றார். இங்கு பருப்பு வகைகள், சோளம், நிலக்கடலை போன்றவை பயிரிடப்படுகின்றன.

இவற்றை விற்பனை செய்வதன் மூலம் முகாமுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது.

இங்கு பணிபுரியும் பெண்களின் சிறு பிள்ளைகளையும், கைக்குழந்தைகளையும் பராமரிப்பதற்காக இப்பிரதேசத்தில் பல சிறுவர் பராமரிப்பு நிலையங்களை லெப்டினனட் கேர்ணல் டபிள்யு.டபிள்யு. ரத்னபிரிய அமைத்துள்ளார். இந்தப் பிள்ளைகளை காலை முதல் மாலை வரையும் பராமரிப்பதற்காக சிவல் பாதுகாப்பு திணைக்களத்தைச் சேர்ந்த பெண் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

லெப்டினனட் கேர்ணல் ரத்னபிரிய இத்துடன் நின்றுவிடாமல் இப்பிரதேசத்தில் வறிய பிள்ளைகளின் கல்விக்காக 250 பாலர் பாடசாலைகளை அமைத்து அதில் 430 ஆசிரியர்களை நியமித்துள்ளார். சாதாரணமாக நாட்டின் எந்தப் பகுதியில் உள்ள பாலர் பாடசாலைகளின் ஆசிரியைகளுக்கும் மிகவும் குறைந்த சம்பளமே கொடுக்கப்படுகிறது. ஆனால், இப்பிரதேசத்தைச் சேர்ந்த பிள்ளைகளின் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் முகமாக இந்த ஆசிரியைகளுக்கு மாதாந்தம் 23,000ரூபா சம்பளமாக வழங்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏ9 பிரதான வீதியைத் தவிர ஏனைய கிராமங்களுக்கு பயணிப்பதற்கான பொதுப் போக்குவரத்து சேவை மிகவும் பலவீனமான நிலையிலேயே இருக்கின்றது. கிளிநொச்சி மாவட்டம் முழுவதுக்கும் 10 இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் மாத்திரமே சகல கிராமங்களையும் ஒன்றிணைக்கும் பணியை செய்கின்றன. இதனால் இப்பிரதேச மக்கள் பெரும்பாலும் துவிச்சக்கர வண்டிகளையும், மோட்டார் சைக்கிள்களையும் பயன்படுத்துகிறார்கள்.

தனக்கு கீழ் பணிபுரியும் அனைவரும் சரியான நேரத்திற்கு கடமைக்கு வருவதற்கு போக்குவரத்து வசதிகள் இல்லாதிருப்பதே காரணம் என்பதை புரிந்து கொண்டுள்ள இவர், தனக்கு கீழ் பணிபுரிபவர்களுக்கு 1000 மோட்டார் சைக்கிள்களையும் 750 துவிச்சக்கர வண்டிகளையும் இலகு கடன் அடிப்படையில் வாங்குவதற்கு உதவி செய்துள்ளார். இவர்களின் சம்பளத்தில் இருந்து இதற்கான குறிப்பிட்ட தொகை மாதா மாதம் செலுத்தப்படுகின்றது.

லெப்டினனட் கேர்ணல் ரத்னபிரிய தனது முகாமில் பரதநாட்டிய மற்றும் மேற்கத்திய நாட்டிய குழுக்களையும் இசைக் குழுவொன்றையும் உருவாக்கியுள்ளார். இந்தக் குழுக்கள் வடபகுதியில் நடைபெறும் பொது நிகழ்ச்சிகளின் போது தங்கள் நிகழ்ச்சிகளை நடத்தி பொது மக்களினதும் அங்கு வருகை தரும் பிரதம அதிதிகளின் பாராட்டுகளை பெற்றுள்ளார்கள்.

விஸ்வமடு சிவில் பாதுகாப்பு திணைக் களத்தின் தலைமையகம் இந்தளவு சாதனைகளைப் புரிந்து மக்கள் பாராட்டைப் பெற்றிருப்பதற்கு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரெயார் எட்மிரல் ஆனந்த பீரிஸ் தமக்கு அளிக்கும் வழிகாட்டலும் ஒத்துழைப்பும் ஆதரவுமே பிரதான காரணமென்று லெப்டினனட் கேர்ணல் டபிள்யு.டபிள்யு. ரத்னபிரிய பாராட்டுகிறார்.


இதே வேளையில் சங்கைக்குரிய வண.வாசி இராகுல தேரர், விஸ்வமடு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் தலைமையகத்துக்கு 10இலட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்களை அன்பளிப்பு செய்துள்ளார். அந்த புத்தகங்களை லெப்டினனட் கேர்ணல் ரத்னபிரிய மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்க உள்ளார். அத்துடன் ஜயபுரத்தில் ஒரு பாலர் பாடசாலையை ஆரம்பிப்பதற்கும் சங்கைக்குரிய தேரர் 50ஆயிரம் ரூபாவை அன்பளிப்பு செய்துள்ளார்.



# யாழ்தேவி விரைவில் யாழ் செல்லும்



எம்.ஜே.எம். தாஜுதீன்



வடக்கு- தெற்கு மக்களின் உறவுப் பாலமாகத் திகழ்ந்த யாழ் தேவி ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படும் நன்னாளை நாட்டு மக்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துள்ளனர்.

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் அடிப்படை நடவடிக்கையாக காங்கேசன்துறை வரையில் இச்சேவையை மீண்டும் நடத்த அரசாங்கம் முழுமூச்சாக செயற்பட்டு வருகின்றது.

போக்குவரத்து அமைச்சின் கீழ் இயங்கும் ரயில்வே திணைக்களம் இந்தியாவின் நிதி உதவி பெற்று 185 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கி இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துகின்றது.

"வடக்கின் வசந்தம்" கருத்திட்டத்தின் கீழ் யாழ்தேவி ரயில் சேவையை புனர்நிர்மாணம் செய்யும் பணிகள் 2009ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

இதன் முதற்கட்டமாக யாழ்தேவி ரயில் தாண்டிக்குளத்தை சென்றடைந்தது. இதனையடுத்து கடந்த மே மாதம் 27 ஆம் திகதி ஓமந்தையை சென்றடைந்தது.

அடுத்த வருடத்தில் யாழ்தேவி ரயில் காங்கேசன்துறை வரை சென்றடையும் என போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மக்களின் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் யாழ்தேவி பிணைந்து இருந்தது.

ஆனால் 1990 ஆம் ஆண்டுக்கு பிந்திய இளைய சந்ததிக்கு யாழ்தேவி பற்றி தெரிந்து இருக்க வாய்ப்பில்லை.

பிரித்தானியர் ஆட்சியில் இலங்கை இருந்தபோது முதன்முதலாக 1864 ஆம் ஆண்டு ரயில் சேவை இந்நாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

ஆனால் 1902 ஆம் ஆண்டுதான் யாழ்ப்பாணத்துக்குக்கான ரயில் சேவை ஆரம்பமானது.

கொழும்பிலிருந்து கடிதங்களையும் சரக்குகளையும் இந்த ரயில் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவந்தது.

ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் நின்று ஆமை வேகத்தில் நகர்ந்து வரும் இந்த ரயில் கொழும்பை வந்து சேர மிக அதிக நேரம் எடுத்தது. இது பிரயாணிகளுக்கு பலத்த எரிச்சலை கொடுத்தது.

இச்சிரமங்களை தவிர்க்கும் நோக்கில்தான் 1956 ஆம் ஆண்டு யாழ்தேவி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கைப் பிரதமராக இருந்த தஹநாயக்க யாழ்தேவியில் பயணம் செய்து சுன்னாகத்தில் உள்ள அவரின் நெருங்கிய நண்பர்களைச் சந்தித்துள்ளார்.

தந்தை செல்வா யாழ்தேவியில் பயணித்துத்தான் கொழும்பைச் சென்றடைவார்.

கொழும்பில் மதியச் சாப்பாட்டை சாப்பிட்டு யாழ்தேவியில் ஏறினால் இரவுச் சாப்பாட்டை யாழ்ப்பாணத்தில் வீட்டில் சாப்பிடலாம்.

தென்னிலங்கைக்கு வேலை வாய்ப்புக்களை பெற்று யாழ்தேவியில் சென்ற தமிழ் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் வெள்ளிக்கிழமைகளில் யாழ்தேவியில் திரும்பி வந்து மீண்டும் ஞாயிறு புறப்பட்டு திங்கட்கிழமை வேலைக்கு செல்கின்றமை வழக்கமாக இருந்தது.

யாழ்தேவியில் சந்திக்கின்ற இளைஞர்களும்-யுவதிகளும் பிரயாண இடைவெளியில் பேசிப் பழகி- காதல் கொண்டு பின்னர் வீட்டாரின் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்ட சுவாரஷ்ய சம்பவங்கள் பல இடம்பெற்றன.

இவ்வாறான நிலையிலேயே 1990ஆம் ஆண்டு ஜுன் மாதம் 12ஆம் திகதி யாழ்தேவி ரயில் முறிகண்டியில் வைத்து பயங்கரவாதிகளின் கண்ணிவெடிக்கு இலக்காகியது.



இதனால் ரயில்வே திணைக்களத்திற்கு பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அன்று முதல் வட மாகாணத்திற்கான யாழ்தேவி புகையிரத சேவை இடைநிறுத்தப்பட்டது.

எனினும் மதவாச்சி வரை புகையிரத சேவை இடம்பெற்றது. பின்னர் அது வவுனியா வரை நீடிக்கப்பட்டது.

அடையாளமே தெரியாத அளவுக்கு சிதைந்து போயுள்ள ரயில் பாதையைக் கண்டு பிடித்து புனரமைப்புச் செய்வது இலேசான காரியமல்ல என வடக்கு ரயில் பாதை செப்பனிடும் பிரதான பொறியியலாளர் பிரிய பெர்னாண்டோ தெரிவித்தார்.

மணிக்கு 80 மைல் வேகத்தில் ரயில்கள் செல்லக்கூடிய ரயில் பாதைகளே முன்னர் அமைக்கப்பட்டிருந்தன. எனினும் மணிக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் ரயில்கள் பயணிக்கக்கூடிய விதத்தில் புதிய ரயில் பாதைகளை நாம் அமைத்து வருகிறோம் என்றும் அவர் கூறினார்.

இலங்கை அரசு வடக்கில் மேற்கொண்டு வரும் துரித அபிவிருத்தியில் மிக முக்கிய பங்கு வகிக்கும் யாழ் தேவி ரயில் சேவை விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு மக்கள் வாழ்வில் வசந்தத்தை கொண்டு வரும் என நிச்சயம் எதிர்பாரக்க முடியும்.



## வடமாகாண சபை தேர்தல்களுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி



-தேர்தல்கள் ஆணையாளர்

செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன் நடத்தப்பட உள்ள வடமாகாண சபை தேர்தல்களுக்கான சகல ஏற்பாடுகளும் ஆரம்பிக்கப் பட்டு உள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தல்களுக்கான தபால் வாக்களிப்புப் பத்திரங்கள், நியமனப் பத்திரங்கள் அச்சுக்கு ஒப்படைக்கப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாகாண சபைகளின் கலைப்புக்கு இணங்க தேர்தல் நடத்தப்படுமென்றும் வடமேல்-வடக்கு உட்பட எந்தவொரு தேர்தலுக்கும் தமது திணைக்களம் தயாராக இருப்பதாகவும் ஆணையாளர் தெரிவித்தார்.

ஒரே தடவையில் பல மாகாண சபைகள் கலைக்கப்பட இடமுண்டென்றும் எந்தவொரு சவாலுக்கும் தயாரென்றும் அவர் தெரிவித்தார். வடக்கு வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தல்களுக்குத் தேவையான வாக்காளர் அட்டை- வாக்குச் சீட்டு மற்றும் அத்தியாவசிய ஆவணங்களை அச்சடிப்பது தொடர்பில் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாப னத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

கிராம சேவகர்களின் உதவியுடன் வாக்கெடுப்பு நடத்தப்படக்கூடிய இடங்கள் குறித்த தரவுகள் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படக்கூடிய அதிகாரிகள் தொடர்பான பெயர் பட்டியல்கள் ஆகிய வற்றை திரட்டும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுடன் கலந்தாலோசித்த பின்னரே தேர்தல்களுக்கு வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை வரவழைப்பதா என்பது தொடர்பில் தீர்மானிப்பேன் எனவும் அவர் தெரிவித்தார்

# வடமாகாணம் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து வடமாகாண அபிவிருத்தி செயலணியின் தலைவர் எஸ்.பி. திவாரட்னவுடனான நேர்காணல்





நேர்காணல்:
எஸ்.தில்லைநாதன்

30 ஆண்டுகால யுத்தத்தினால் இடம்பெயர்ந்த சுமார் 3இலட்சம் அப்பாவி மக்களுக்கு இலங்கை அரசாங்கம் புனர்வாழ்வு அளிப்பதிலும், மீள் குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் வாழ்வாதாரத்தை பெற்றுக் கொடுப்பதிலும் திருப்தியாக செயற்படவில்லை என்று உலக நாடுகளில் இலங்கைக்கு எதிரான அரச சார்பற்ற அமைப்புகளும், எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தை ஆதரிக்கும் புலம்பெயர்ந்த மக்களும் போலிப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றன.

இந்தப் போலிப் பிரச்சாரங்களை அடிப் படையாக வைத்து ஜெனீவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் அமெரிக்கா, இலங்கை யுத்தக் குற்றச் சாட்டுகளையும் மனித உரிமை மீறல்களையும் மேற்கொண்டுள்ளது என்ற பிரேரணையும் நிறைவேற்றி இலங்கை அரசாங்கத்தின் மீது பாரிய அழுத்தங்களை கொண்டு வந்தது.

இவ்விதம் இலங்கை மீது மனித உரிமை மீறல், இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றாத நிலையில் வைத்திருத்தல் போன்ற குற்றச்சாட்டுகளை சர்வதேச ரீதியில் பல நாடுகளில் பேசக்கூடிய அளவுக்குப் போலிப் பிரச்சாரங்கள் செய்யப்பட்டு வருகின்ற போதிலும் இலங்கையின் உண்மை நிலையை தெரிந்து கொள்ள ஒருவர் கூட விருப்பத்தையோ, ஆர்வத்தையோ காண் பிப்பதில்லை.

இந்தப் பின்னணியில் நாம் அரசாங்கம் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கு இதுவரை செய்துள்ள பணிகளை ஆதாரபூர்வமாக எடுத்துரைப்பது எமது பொறுப்பு என்பதனால், அந்த உண்மைகளை இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துரைக்க நினைக்கின்றோம்.

30 ஆண்டு கால யுத்தத்தின் பின்னர் புலிகள் தரப்பில் இருந்து இராணுவம் நிலைகொண்டிருந்த பகுதிக்கு தப்பி வந்த சுமார் 3 இலட்சம் பேர் வவுனியா மாவட்டத்தில் உள்ள மெனிக்பாமில் தற்காலிகமாக தங்க வைத்து அவர்களுக்கு பாதுகாப்பையும், உணவையும் இருப்பிட





வசதியையும் அரசாங்கம் செய்து கொடுத்தது. இதுபற்றி நாம் ஜனாதிபதியின் ஆலோசகரும், வடமாகாணத்திற்கான மீள்குடியேற்ற அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்கு பொறுப்பான செயலணியின் தலைவருமான திரு. எஸ்.பி. திவாரட்னவை சந்தித்தோம். அவர் அளித்த பிரத்தியேக பேட்டியை இங்கு தருகின்றோம்.

**கேள்வி:** இந்த மக்களை மீள்குடி யேற்றுவதற்கு நீங்கள் இதுவரை செய்துவரும் செயற்திட்டங்களை விளக்கிக் கூற முடியுமா?

**திவாரட்ன:** ஆம். மெனிக்பாமில் தங்கியிருந்த மக்களில் 95சதவீதமானோர் அவர்களின் பூர்வீக வாசஸ்தலங்கள் இருந்த இடங்களில் மீள் குடியேற்றப்பட்டுள்ளார்கள். இது இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட பணிகளில் சிறப்புமிக்க பணியாக அமைந்துள்ளது.

**கேள்வி:** மீள் குடியேற்றப்படும் மக்களுக்கு முதலில் சுத்தமான குடிநீர் அவசியம்.இது தொடர்பாக நீங்கள் என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளீர்கள்?

**திவாரட்ன:** வடமாகாணத்தில் மாத்திரம் நாம் 35ஆயிரம் குடிநீர் கிணறுகளை புனர்நிர்மாணம் செய்துள்ளோம். சில கிணறுகள் பழுதடைந்த நிலையில் இருந்தன. அவற்றையும் திருத்தியமைத்தோம். மீள் குடியேறிய மக்களுக்கு இந்த கிணறுகளில் இருந்து சுத்தமான நீரை பெற்றுக் கொள்ள முடியும். தூய்மையான நீர் இல்லாத பிரதேசங்களுக்கு அரசாங்கம் பௌசர்கள் மூலம் சுத்தமான குடிநீரை நாளாந்தம் விநியோகித்து வருகின்றது.

நாம் இதனுடன் நின்றுவிடாமல் மீள் குடியேறியுள்ள மக்களுக்கு சுத்தமான கழிவறை வசதிகளையும் செய்து கொடுத்து அவர்கள் வாழும் பிரதேசத்தில் சுகாதார வசதிகளையும் அதிகரித்து மக்களை நிம்மதியாக வாழ வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

**கேள்வி:** 30 ஆண்டுகால யுத்தத்தினாலும் சுனாமி அனர்த்தத்தினாலும் சேதமடைந்தும்,

தரைமட்டமாகியுள்ள பாடசாலை கட்டிடங்களை நீங்கள் எந்த அடிப்படையில் திருத்தியமைத்தீர்கள்?

**திவாரட்ன:** வடமாகாணத்தில் எல்லாமாக 1,026 பாடசாலைகள் இருக்கின்றன. இவற்றில் 650 பாடசாலைகளின் கூரைகள் தகர்ந்துள்ளன. எனவே, யுத்தம் முடிவடைந்து மூன்றரை வருடங்களுக்குள் நாம் பெரும்பான்மையான பாடசாலைகளை புனரமைத்தும் அங்கு பிள்ளைகளுக்கு கல்வி புகட்டுவதற்கான வசதிகளை பெருக்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன்படி தற்போது 989 பாடசாலைகள் சிறந்த முறையில் வடமாகாணத்தில் இயங்குகின்றன.

வடமாகாணத்தில் எல்லாமாக 2 இலட்சத்து 60ஆயிரத்து 582 பாடசாலை பிள்ளைகள் கல்வி கற்கிறார்கள். அவர்களுக்கு 13ஆயிரத்து 967 ஆசிரியர்கள் கல்வி கற்றுக் கொடுக்கிறார்கள். இவ்விதம் சேதமடைந்த பாடசாலைகளை புனர்நிர்மாணம் செய்வதற்கு அரசாங்கம் 1.3 பில்லியன் ரூபாவை செலவு செய்து வருகிறது.

**கேள்வி:** வடமாகாணத்தில் பலதரப்பட்ட அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றைப் பற்றி சற்று விளக்கிக் கூற முடியுமா?

**திவாரட்ன:** வடமாகாணத்தில் இயற்கை அனர்த்தங்களும் மனிதனால் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்காமல் சுயநல நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட அ னர்த்தங்களும் பெருமளவில் அமைந்திருந்தது. இது அரசாங்கத்துக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்தது.

நான் அனர்த்த முகாமைத்துவ பேரவையின் தலைவராக இருந்தமையால் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டவுடன் ஜனாதிபதி அவர்களின் ஆலோசனையுடன் உடனடியாக மீட்புப் பணிகளை ஆரம்பித்து அந்த மக்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுத்தேன். சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட போது இன்றைய ஜனாதிபதி பிரதம மந்திரியாகவே இருந்தார். அப்போது அவர் அன்றைய ஜனாதிபதி நாட்டில் இல்லாத காரணத்தினால் அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு சிறந்த முறையில் நிவாரணப் பணியை துரிதப்படுத்தினார்.

**கேள்வி:** அன்று நீங்கள் எந்த அடிப்படையில் மீள் குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டீர்கள்?

**திவாரட்ன:** நாம் மக்களை மீள் குடியேற்றும் செயற்பாட்டினை 2009ம் ஆண்டில் மிகவும் அவதானமாக ஆரம்பித்தோம். நாம் திட்டமிட்டே ஒவ்வொரு நடவடிக்கையையும் மேற்கொண்டோமே ஒழிய அவசரப்பட்டு எதனையும் செய்யவில்லை. நாம் திட்டமிட்டு நிதானமாக இப்பணியை மேற்கொண்டமையால் தான் இன்று சர்வதேசம் பாராட்டக்கூடிய வகையில் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த ஊர்களில் குடியமர்த்தும் சாதனையை ஏற்படுத்த முடிந்தது.

**கேள்வி:** சரி. எந்த அடிப்படையில் இதனை செய்தீர்கள்?

**திவாரட்ன:** நான்கு அம்ச திட்டத்தின் கீழ் இதனை நாம் செய்தோம். முதலாவதாக, அவர்களே தங்கள் விருப்பத்தின் பெயரில் மீள் குடியேற விரும்பிய இடங்களில் குடியமர்த்தினோம். அடுத்தபடியாக இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களிலேயே குடியமர்த்துவதற்கும் நாம் அரும்பாடு பட்டு அதனை செய்து முடித்தோம். மூன்றாவதாக இந்த மீள்குடியேற்றம் மரியாதையாகவும், குடியேறுபவர்களுக்கு பாதுகாப்பாகவும் அமைய வேண்டும். நான்காவது அம்சமாக இலங்கை இராணுவம் இந்த மீள்குடியேறிய மக்களுக்கு எங்களுடன் பங்குதாரர்களாக இணைந்து உதவி செய்ய வேண்டுமென்பதாக இருந்தது.

**கேள்வி:** இதுவரை நீங்கள் சாதித்த மீள்குடியேற்ற செயற்பாடுகளை எடுத்து சொல்லுங்கள்.

**திவாரட்ன:** நாம் ஏறத்தாழ ஒரு இலட்சத்து 42ஆயிரத்து 320 குடும்பங்களை

மீள்குடியேற்றி இருக்கிறோம். மெனிக்பாமில் உள்ளவர்கள் மட்டுமல்ல, அதற்கு வெளியில் நண்பர்கள், உறவினர்களுடன் இருந்தவர்களும் இதில் அடங்குவர். இதனடிப்படையில் 4 இலட்சத்து 98ஆயிரத்து 838பேர் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

**கேள்வி:** மீள் குடியேற்றத் திட்டம் முற்றுப் பெற்றுவிட்டதா?

**திவாரட்ன:** யாழ்ப்பாணத்திலும் மன்னார் மாவட்டத்திலும் உள்ள சில குடும்பங்களைத் தவிர மற்ற இடங்களில் அனைவரும் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் 7 ஆயிரத்து 830 குடும்பங்களின் காணிகள் அரசாங்க செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப் படுகின்ற காரணத்தினால் அரசாங்கம் இக்காணிகளை விடுவிக்கும் வரை இவர்களை மீள்குடியேற்ற முடியாதிருக்கிறது. இந்தக் காணிகளை அரசாங்கம் விடுவிக்க முடியாது இருந்தால் அதற்கான நஷ்டஈடு இவர்களுக்கு கொடுக்கப்படும்.

**கேள்வி:** அடுத்தபடியாக சுகாதார சேவையைப் பற்றி சில தகவல்களை தாருங்கள்?

**திவாரட்ன:** 30 ஆண்டுகால யுத்தத்தின் போது கிளிநொச்சி மாவட்டமே அதிகம் பாதிப்புக்குள்ளானது. அங்கு தரைமட்ட மாக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளை நாம் புதிய கட்டிடங்களாக நிர்மாணித்துள்ளோம். 2009 மற்றும் 2011ம் ஆண்டுகளில் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக 2135 மில்லியன் ரூபா செலவாகியது. இவற்றைவிட தற்போது அமுலில் உள்ள திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக 9ஆயிரத்து 254மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** தற்போது வடபகுதியில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான விகிதாசாரம் எப்படி அமைந்துள்ளது?

**எஸ்.பி. திவாரட்ன:** யதார்த்தபூர்வமாக அமைந்துள்ளது. 2009ம் ஆண்டு முதல் 1,630 பாடசாலைக் கட்டிடங்கள் 1,341 மில்லியன் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டன. வடபகுதியில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான விகிதாசாரம் தேசிய விகிதாசாரத்தைப் போன்று அதே அளவில் அமைந்திருப்பது நாம் மகிழ்ச்சியடைய வேண்டிய விடயமாகும்.

**கேள்வி:** சுகாதாரத்துறையில் குறிப்பாக தொற்றுநோய் பரவுவதை எந்தளவுக்கு நீங்கள் தடுக்கக்கூடியதாக இருந்தது?

**திவாரட்ன:** ஒரு வயதிற்கும் இரண்டு வயதிற்கும் இடைப்பட்ட பிள்ளைகளின் போஷாக்கின்மை குறிப்பிடத்தக்க அளவு குறைந்திருக்கிறது. மற்ற மாகாணங்களை விட வட மாகாணத்தில் 2010 முதல் 2012 வரையில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது.

**கேள்வி:** வீடமைப்புத்துறையில் நீங்கள் அடைந்துள்ள முன்னேற்றம் என்ன?

**திவாரட்ன:** வடபகுதியில் எல்லாமாக 78ஆயிரம் நிரந்தர வீடுகளின் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரையில் 27ஆயிரத்து 983 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**கேள்வி:** வீதி மற்றும் ரயில் பாதைகளின் புனரமைப்பு பற்றி தகவல்களை தாருங்கள்?

**திவாரட்ன:** அரசாங்கம் வடபகுதியில் மட்டுமல்ல, நாடெங்கிலும் பாதை இணைப்பு பணிகளுக்காக பெருமளவு பணத்தை முதலீடு செய்துள்ளது. சகல பிரதான நெடுஞ்சாலைகளும் புனரமைக்கப்பட்டுள்ளன. பிரதான பாதைகள், மாகாணசபையின் பாதைகள் மற்றும் கிராமிய பாதைகள் அனைத்துமே திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இதற்கென அரசாங்கம் 7 ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளது. வடமாகாணத்தில் மாத்திரம் 2009ம் ஆண்டில் 47 ஆயிரத்து 31 புதிய வாகனங்கள் பதிவாகியுள்ளன. இந்த எண்ணிக்கை 2011ல் 62ஆயிரத்து 644ஆக அதிகரித்துள்ளன. ரயில் பாதையை காங்கேசன்துறை வரை புனர் நிர்மாணம் செய்வதற்கு 652 மில்லியன்

அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது. ஓமந்தை ரயில் நிலையத்தில் இருந்து மடுவுக்கான ரயில் சேவை மே மாதம் 17ம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** விவசாயத்துறையில் நீங்கள் அடைந்துள்ள சாதனைகளை குறிப்பிட முடியுமா?

**திவாரட்ன:** விவசாயத்துறையே மக்களுக்கு அடிப்படை உணவுப்பாதுகாப்பு அளிக்கும் ஒரு துறையாகும். விவசாயத்துறையை 80 சதவீதமான மக்கள் தங்கள் வாழ்வாதாரமாக கொண்டுள்ளார்கள். அத்துடன் இந்த மூன்றாண்டு காலத்தில் நாம் வடபகுதியின் நீர்ப்பாசன வலையமைப்பை சிறந்த முறையில் திருத்தியமைத்துள்ளோம்.

பயன்படுத்தப்படாத நெற்காணிகளை உழுது அங்கு விவசாயத்தை ஆரம்பித்துள்ளோம். விவசாயத்துக்கு தேவையான இயந்திர உபகரணங்களை விவசாயிகளுக்கு சலுகை அடிப்படையில் வங்கிக் கடன்கள் அடிப்படையில் பெற்றுக் கொடுத்துள்ளோம். தற்போது வடபகுதியில் ஒரு இலட்சத்து 93ஆயிரத்து 200ஏக்கர் காணியில் விவசாயம் செய்கை பண்ணப்படுகிறது. இதன் மூலம் அங்கு இரண்டு இலட்சத்து 12ஆயிரத்து 722 மெற்றிக்தொன் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது.

**கேள்வி:** நீர்த்தேக்கங்களை நீங்கள் எவ்விதம் திருத்தியமைத்துள்ளீர்கள்?

**திவாரட்ன:** நாம் சிறிய, நடுத்தர அளவிலான 200 குளங்களை திருத்தியமைத்துள்ளோம். இவற்றின் மூலம் ஒரு இலட்சத்து 89ஆயிரம் ஏக்கர் நெற்காணிகளுக்கு நீர்ப்பாசனம் வழங்கப்படுகிறது. இதற்கென நாம் 6ஆயிரத்து 334மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளோம்.

**கேள்வி:** வடபகுதியின் மீன்பிடித்துறை எவ்விதம் முன்னேற்றமடைந்துள்ளது?

**திவாரட்ன:** நாம் மீனவர்களுக்கு தேவையான படகுகள், இயந்திரங்கள், வலைகள் போன்ற பொருட்களை இலகு கடன் அடிப்படையில் பெற்றுக் கொடுத்துள்ளோம். நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் 11சதவீதம் தற்போது வடபகுதியில் பெறப்படுகிறது. தற்போது வடமாகாணத்தில் மீன் உற்பத்தி அதிகரித்துள்ளது. 2009ல் 21ஆயிரத்து 880 மெற்றிக் தொன் மீன் பிடிக்கப்பட்டது. இந்த எண்ணிக்கை 2011ல் 48ஆயிரத்து 520 மெற்றிக் தொன்னாக அதிகரித்தது.

வடபகுதியில் கடலிலும் நன்னீரிலும் 50ஆயிரம் மீனவர்கள் நாளாந்தம் உழைக்கிறார்கள். வடபகுதியில் இருந்து கொழும்புக்கு 28 குளிரூட்டப்பட்ட லொறிகளில் மீன் அனுப்பி வைக்கப்படுகிறது. 2008ம் ஆண்டில் வடபகுதியில் மீன் உற்பத்தி பூஜ்ஜிய நிலையில் இருந்தமை குறிப்பிடத் தக்கது. அதுபோன்று கால்நடை உற்பத்தியும் கோழிப்பண்ணையும் வடபகுதியில் இப்போது சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

இவ்விதம் இன்று வடமாகாணம் பொருளாதாரத்துறையில் மறுமலர்ச்சி அடைந்துள்ளது. மக்களும் மன நிம்மதியுடன் மகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இலங்கை பற்றி விமர்சிக்கும் வெளிநாட்டவர் இங்கு வந்து உண்மை நிலையை கண்டறிந்தால் நிச்சயம் அவர்கள் தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்துக்கு இவ்விதம் அநாவசியமான அழுத்தங்களை கொண்டுவருவதை தவிர்த்துக் கொள்வார்கள்.



## பத்தமுல்லை நுழைவாயிலை அலங்கரிக்கும்

# நீரியல் பூங்கா

## "தியத உயன"

நூருல்அயின் நஜ்முல் ஹுசைன்



இலங்கையின் அரசியல் தலைமைத் துவத்தை நிர்ணயிக்கும் பாராளுமன்ற கட்டிடம் அமைந்துள்ள பத்தரமுல்லை நுழைவாயிலை அலங்கரிக்க, புதிய பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சே இராணுவத்தினரின் உதவியுடன் இந்த பூங்காவை அமைத்துள்ளது. நீரியல் பூங்கா- "தியத உயன" என பெயரிடப்பட்டுள்ள இந்த பூங்கா, பிரதான பாதையால் செல்வோரின் கண்களை சுண்டி இழுக்கின்றது என்றால் அது மிகையாகாது. இப்பாதையூடாக வருவோர் போவோரை வருக!வருக!வென அழைப்பது போலவும் இது காட்சியளிக்கிறது. எனவே வருவோர் போவோர் எல்லாம் விழிகளை அகல விரித்தே இந்த பூங்காவை பார்க்கின்றனர். ஆரம்ப காலங்களில் வெறும் எலும்புக் கூடு ஒன்று நிறுத்தி வைக்கப்பட்ட காடு போல் காட்சியளித்த இந்த இடம், இன்று கண்கவர் பிரதேசமாக மாறியுள்ளது என்றால் ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக இலங்கையை மாற்றும் அரசாங்க நடவடிக்கைகளின் இதுவும் ஒரு படிக்கட்டு எனலாம்.

கொழும்பு இலங்கையின் வர்த்தக தலை நகரமாக திகழ்கின்றது. அவ்வாறே பத்தரமுல்லை இலங்கையின் நிருவாக தலைநகராக இன்று நிமிர்ந்து நிற்கின்றது. பாராளுமன்ற கட்டிடத் தொகுதி மட்டுமல்ல, பிரதான அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் முக்கிய அரச நிறுவனங்கள் அனைத்தும் இன்று பத்தரமுல்லை நகரிலேயே இயங்குகின்றன.

எனவே இந்த நகரை மேலும் மெருகூட்டும் வகையில் பாராளுமன்ற நுழைவாயிலிலேயே தியவன்னா ஒய ஆற்றுப்படுக்கையில் இந்த நீரியல் பூங்கா- "தியத உயன" அமைந்துள்ளமை உண்மையிலேயே எவராலும் வரவேற்கப்பட வேண்டிய விடயமேயாகும். இதனால் தான் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட

பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தும் போது இந்த பத்தரமுல்லை பூங்காவை மிகவும் புகழ்ந்துரைத்தனர். இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டுத் தலைவர்கள் தூதுவர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளையும் இந்த பூங்கா வெகுவாக கவர்ந் துள்ளது. தூரத்திலிருந்து பார்க்கும் போது காளான் செய்கையைப்போல காட்சியளிக்கும் இந்த பூங்கா முஸ்லிம்களின் புனித மக்கா யாத்திரையை கூட ஞாபகமூட்டுகிறது. புனித மக்கா நகரிலே ஹஜ் யாத்திரிகர்கள் தங்குவதற்காக மீனாவில் கட்டப்பட்ட கூடாரங்களையொத்ததாகவே இவை அமைக்கப்பட்டிருப்பது மற்றுமொரு சிறப்பம்சமாகும். பொருளாதார ரீதியில் துரித கதியில் அபிவிருத்தியடைந்து செல்லும் இலங்கையில், உல்லாசப்பிரயாணிகளை கவரும் கண்கவர் பிரதேசமாகவே இந்தப்பகுதி புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. “தியத உயன”என பெயரிடப்பட்டுள்ள இவ் அழகிய பிரதேசத்தில் உள்நாட்டு தாவரங்கள் மற்றும் வெப்ப மண்டல பூத்தாவரங்கள், உள்நாட்டு கலை நுட்ப பொருட்கள் போன்றவற்றை விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் செய்ய முடியும். கடந்த வருடம் செப்டெம்பர் 15ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இக்கண்கவர் பூங்கா திறந்து வைக்கப்பட்டது.



இங்கு மனதை மகிழ்வூட்டும், மனதிற்கு அமைதியளிக்கும் வகையில் அழகிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன, இதில் பூக்கள் விற்பனை செய்யப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. கண்கவர் நீரூற்றும் அப் பிரதேசத்திற்கு மேலும் அழகை சேர்க்கின்றது. இரவு வேளைகளில் இந்த நீரூற்றிலிருந்து வெளியேற்றப்படும் நீர் துளிகள் கண்களுக்கு விருந்தளிக்கின்றன. “தியத உயன”தற்போது பிரபல்யம் அடைந்து வருவதுடன் உள்நாட்டு தாவர விற்பனை மற்றும் சந்தைப் படுத்தலுக்கான பிரதான நிலையமாகவும் திகழ்கின்றது.

இது தியவன்னா ஆற்றுக்கு அருகாமையில் அமைக்கப் பட்டுள்ளது. இங்கு கொழும்பின் வெள்ளக் கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் நீர்த்தேக்க மொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நீர் தேக்கமும் அப்பிரதேசத்திற்கு மேலும் மெருகூட்டுகின்றது.

இதைத்தவிர இப்பிரதேசத்தில் பொழுது போக்குப் பூங்காவொன்றும் அமைக்கப் பட்டுள்ளது. சிறுவர்கள் மன மகிழ்வுடன்





விளையாடக்கூடிய வகையில் இப்பூங்காவும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பெற்றோர்கள் பொருட்களை கொள்வனவு செய்யும் வரை, பிள்ளைகள் இங்கு விளையாடி மகிழ்கின்றனர்.

இலங்கையின் முதலாவது கண்கவர் இசைச்சார் நீரூற்று இப்பூங்காவில் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். மின் குமிழ்களால் அலங்கரிக்கப்பட்ட இந் நீரூற்று இரவு வேளைகளில் மிகுந்த அழகுடன் காட்சியளிக்கின்றது.

பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள நடை பாதையில் மாலை வேளைகளில், இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை உடற் பயிற்சி செய்யக் கூடிய வகையில் சிறப்பாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இன்று பெரும்பாலான மணமக்கள் கூட முதன்முதலாக புகைப்படம் எடுப்பதற்கு இந்த தியவன்னா பூங்காவை தான் தெரிவு செய் கின்றனர். ரம்யமான காலை வேளைகளில் இப்பாதை வழியாக அலுவலகம் செல்வோர் புகைப்படத்துக்காக "போஸ்" கொடுக்கும் புதுமணத் தம்பதிகளை அடிக்கடி காணக்கூடியதாக இருக்கிறது. தியவன்னா ஆற்றில் ஆங்காங்கே செல்லும் படகுகளும் இந்த பூங்காவுக்கு மேலும் மெருகேற்று கின்றன. அதுமட்டுமன்றி ஆற்றிலே அன்னப்பறவையை ஒத்த படகுச் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிறுவர் சிறுமியரை மகிழ்ச்சிப்படுத்தும் இந்த சேவையும் அனைவரையும் கவர்ந்துள்ளது. விடுமுறை நாட்களில் சின்னஞ்சிறார்களால் இங்கு நிரம்பி வழிகின்றது. தற்பொழுது இப்பிரதேசமானது மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்து வருகின்றது. இங்கு வருபவர்கள் பொருட்களை வாங்குவதற்கு மட்டுமல்லாது இளைப்பாறவும் வருகின்றனர். செழிப்பான இயற்கை சூழல் மனதிற்கு நிம்மதியளிக்கிறது.கண்களுக்கு குளிர்ச்சி யளிக்கிறது. இயற்கை காட்சிகளை கண்டு கழிக்கவும் மக்கள் பலர் இங்கு வருகின்றனர். உணவுகளையும் குடிபானங்களையும் பெற்றுக்கொள்ளும் வசதிகளும் இங்கு



காணப்படுகின்றது. நாளுக்கு நாள் இங்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இந்த பூங்காவின் இரண்டாம் கட்ட புனரமைப்பு வேலைகள் முடிந்த பின்னர் இம்மாதம் முதல் வாரத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் புதிய பகுதியினையும் திறந்து வைத்தார். இந்த பூங்காவில் தற்சமயம் கண்கவர் மீன்களைக் கொண்ட மீன் கூடம் ஒன்றும் தயாரிக்கப் படுகின்றது. எதிர்காலத்தில் இந்த பூங்கா மீன் இனப்பூங்காவாகவும் மிளிரும் "தியத உயன" நவீன தொழில் நுட்பத்துடன் அமைக்கப்பட்ட இயற்கையான அழகைக் கொண்டுள்ளது. எனவே இப்பூங்கா உள்நாட்டவர்களை மட்டுமல்ல, வெளிநாட்டவர்களையும் கவரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.






"தேசத்துக்கு மகுடம் 2014" கண்காட்சி தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

அம்பாறையில் நடைபெற்ற தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்தி 2013 கண்காட்சியின்போது அப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

தேசத்துக்கு மகுடம் 2013 தேசிய அபிவிருத்தி கண்காட்சியில் மிகவும் சிறப்பான முறையில் காட்சிகூடங்களை அமைத்த 10 பேருக்கு ஜனாதிபதி விருதுகள் வழங்கினார். தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சி குழுத் தலைவர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் இதில் கலந்துகொண்டனர்.









எஸ். மோசஸ்

உயர்கல்வி அமைச்சின் தேசிய உயர்கல்வி நிறுவனங்களுக்கிடையிலான ஆக்கத்திறன் விருது வழங்கல் விழா மிககோலாகலமான முறையில் நடந்து முடிந்துள்ளது. இலங்கை வரலாற்றில் முதன்முதலாக இடம்பெற்ற இவ்விழா, இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை வலுப்படுத்தும் வகையில் மிகச்சிறப்பாக இடம்பெற்ற ஒரு வெற்றி விழாவாகும்.

இதுவரை காலமும் இடம்பெறாத வகையில் தமிழ் மொழிக்கென்று தனியொரு வகையாக வகுக்கப்பட்டு பேராசிரியர் சி.மௌனகுரு, முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீபிரசாந்தன் ஆகியோரின் கூட்டு நெறிப்படுத்தலில் கச்சிதமாக நடத்தப்பட்டு பெறுமதியான பணப்பரிசுகளும் விருதுகளும் சான்றிதழ்களும் தமிழ்மொழியில் போட்டியிட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை வளர்த்தெடுக்கும் நோக்கிலான இப்போட்டிகளில் தமிழ்பேசும் மாணவர்களான தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்களும் ஆர்வத்தோடு கலந்துகொண்டு தமது



ஆற்றல்களையும் வெளிப்படுத்தினார்கள். ஜனாதிபதியின் சிந்தனைக்கு உயர்கல்வி அமைச்சர் எஸ்.பீ.திசாநாயக்க சிறப்பாக செயல் வடிவம் கொடுத்திருந்தார்.

இலங்கையின் உயர்கல்வி அமைச்சின் கீழ் இயங்கிவரும் அனைத்து அரச பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர்கல்வி தொழில்நுட்ப நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவர் களின் பல்வேறுபட்ட கலைத் திறமைகளை மேம்படுத்துவதற்காகவும், காட்சிப்படுத்து வதற்காகவும், தமது ஆற்றலை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துவதற்காகவும், அத்திறன்களை மதிப்பீடு செய்வதற்காகவும் உயர் கல்வி அமைச்சின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமே தமிழில் "ஆற்றல்" எனவும், சிங்களத்தில் "கவிதா" எனவும், ஆங்கிலத்தில் 'TALENT' எனவும் அழைக்கப்படும் மாணவர்களின் ஆற்றலை இனங்கண்டு விருது வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்.

இதில் நாடுமுழுவதிலும் உள்ள முப்பத்தொன்பதுக்கும் மேற்பட்ட உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் பங்கெடுத்தார்கள். படைப்பாற்றலுடன் கூடிய ஆளுமைகள் மிக்க கல்வித்திறன் படைத்த இளம் சமூகத்தினரை தேசத்தின் அபிவிருத்தியில் இணைத்துக்கொள்வதே இதன் பிரதான நோக்கமாகும். அதற்கமைய பின்வரும் குறிக்கோள்களையுடையதாக இந்நிகழ்ச்சித்திட்டம் வரையப்பட்டிருக் கின்றது.

- 21ம் நூற்றாண்டின் சவால்களை வென்றெடுக்கக்கூடிய பல்வேறு திறன் படைத்த உயர் படைப்பாற்றல் மிக்க சமூகத்தினரை தோற்றுவித்தல்.
- கல்வி கற்ற சமூகத்தின் பல்வேறுபட்ட கலைத்திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பமாக இதனை தோற்றுவித்தல்.
- எமது நாட்டு மாணவர்களின் திறன்களை வெளிப்படுத்துவதற்கும், காட்சிப்படுத்துவதற்குமான களமாக இதனை ஏற்படுத்துதல்.



- பன்முக திறமைமிக்க கற்றறிவாளர்களை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தல்.
- திறமைமிக்க இளைஞர், யுவதிகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்துதலும் அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக விருதுகளை வழங்குதலும்.

இதில் வடக்கு கிழக்கு உட்பட அனைத்து பல்கலைக்கழகங்களைச் சார்ந்த மாணவர்களும் பங்கெடுக்க வேண்டும் என்ற வகையில், போட்டிகளுக்கான விண்ணப்பங் களை பெற்றுக் கொள்வதற்கும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிப் பதற்கும் ஒவ்வொரு பல்கலைக் கழகங்களிலும் இணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இது தமிழ் பேசும் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது.

இலக்கியப்பிரிவு, மேடைநாடக பிரதியாக்கப் பிரிவு, திரைப்படப்பிரிவு, ஓவியப்பிரிவு, நிழற்படப்பிரிவு, இசைப்பிரிவு, நடனப்பிரிவு, இலத்திரனியல் ஊடகப்பிரிவு என்ற வகையில் பெரும் பிரிவுகள் முறையாக வகுக்கப்பட்டு, அதற்குள் ஐம்பதுக்கும் மேற்பட்ட போட்டிகள் இடம்பெற்றன. ஒவ்வொரு போட்டிகளிலும் வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகளும், பணப்பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப் பட்டன. முதலாமிடங்களைப் பெற்றவர் களுக்கு ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசுடன்

விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டது. இரண்டாமிடங்களை பெற்றவர்களுக்கு எழுபத்தைந்தாயிரம் ரூபா பணப்பரிசுடன் சான்றிதழும் வழங்கப்பட்டது. மூன்றாமிடங்களை பெற்றவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபா பணப்பரிசுடன் சான்றிதழும் வழங்கப்பட்டது. அத்தோடு கூடுதலான வெற்றிகளை பெற்றுக்கொண்ட முதல் மூன்று உயர்கல்வி நிறுவனங்களுக்கும் விருதுகளும் பணப்பரிசுகளும் வழங்கப் பட்டன.

இளஞ்சமூகத்தினரின் இரசனைமிக்க சக்தியினை தோற்றுவிப்பதற்கான திறந்தவெளியரங்காக இந்நிகழ்வு அமைகின்றது. அந்தவகையில் சகல இனங்களினதும் இளம் சமூகத்தில் “கவிதா“ திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

சமூகத்தினை நேசிக்கக்கூடிய, உள்ளம் படைத்த கல்வி கற்றதோர் சமூகத்தினையும், கலைஞர்களையும் உருவாக்குவதாக அமைவதே எமது குறிக்கோள் என கருதி செயற்படும் இலங்கை அரசினது நடைமுறை சாத்தியமான செயற்பாடுகளின் அறிவின் கேந்திரமாகவே இந்நிகழ்வுகள் நோக்கப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தினுள் தமது பாடநெறி களோடு மட்டும் முடங்கிவிடாமல், பல துறைகளிலும் பல்வேறுபட்ட திறமையுள்ளவர்களாக மாணவர்கள் விளங்கினார்கள். அப்படிப்பட்ட மாணவர்களுக்கு தேசிய மட்டத்திலான எந்தவொரு மதிப்பீடோ, அங்கீகாரமோ இதுவரை வழங்கப்படவில்லை. ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் சிந்தனையில் உதித்து, உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க அவர்களின் செயற் படுத்தலில் இடம்பெற்று வருகின்ற இத்திட்டம் வருடாவருடம் இனி இடம்பெறவிருக்கின்றன என்பது அனைவரினதும் பாராட்டுக்குரிய செய்தியாக மட்டுமின்றி, காலத்தின் கட்டாயத் தேவையுமாக கருதப்படுகிறது.

இலங்கையை அறிவின் கேந்திர நிலையமாக மாற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் அறிவுத் திறன்களை அபிவிருத்தி செய்யும், அவர்களை பல்லின சமூகத்தின் செயற்பாட்டாளர்களாக மாற்றியமைக்கும், மாணவர்களை உயரிய மனித வளமாக தோற்றுவிக்க முயற்சிக்கும், அதிஉச்ச திறமைமிக்க பட்டதாரிகளை உருவாக்கும் நோக்கில் செயற்படும் அரசினதும் உயர்கல்வி அமைச்சினதும் நோக்கம் கௌரவத்துடன் நிறைவேற்றப்பட்டதென்று உறுதியாகக் கூறும் வகையில் “கவிதா 2012“ நிகழ்வுகள் அமைந்திருந்தன.






## உலகை வலம் வரும்

# மத்தள

இராவணர் யுகத்தில் புஷ்ப விமானத்தில் ஆகாய மார்க்கமாகப் பாரத தேசத்திற்குச் சென்று சீதையை அழைத்து வந்த செய்தி விமான எண்ணக்கரு என்ற அடிப்படையில் எமது வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. அன்று அந்த விமானத்தைத் தரையிறக்குவதற்கு விஷேட தளமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும். எட்டாவது உலக அதிசயமாக முன்மொழியப்பட்டிருக்கும் சிகிரியா போன்ற பாரிய நிர்மாணங்கள், ருவன்வெலிசாய, ஜெதவனராமய போன்ற மிக உயர்ந்த தாதுகோபுரங்கள், கடலைப் போன்ற பராக்கிரம சமுத்திரம் உள்ளிட்ட பாரிய குளங்கள் என்பன இலங்கையரை மாத்திரமன்றி உலகத்தினரையே வியப்படையச் செய்து கொண்டிருக்கின்றது.

என்றாலும் பலவித அந்நிய ஆக்கிரமிப்புகளுக்கு இந்நாடு காலப்போக்கில் உள்ளானதால் எமது உள்ளூர் பலம் குன்றி அந்நிய ஆக்கிரமிப்பில் தங்கி வாழ வேண்டிய நிலமை உருவானது. எனினும் எமது பாரம்பரிய சக்தியை மீண்டும் வெளிப்படுத்தும் நோக்கிலான பலவித முயற்சிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் பொருட்டு எமது வசதிகளை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தும்






நடவடிக்கைகள் சுட்டிக்காட்டத்தக்கவையாக உள்ளன. அறிவு, வர்த்தகம், விமானம், கப்பல், எரிசக்தி ஆகிய ஐந்து துறைகளிலும் கேந்திர முக்கியத்துவத்தை அடையும் இலக்குடன் ஆசியாவிலேயே உயர்ந்த இடத்தை பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் இன்னொரு நடவடிக்கையாக இரண்டாவது சர்வதேச விமான நிலைய நிர்மாணத்தை அடையாளப்படுத்தலாம். அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள மத்தள பிரதேசத்தில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டதானது, இங்கு குறிப்பிடப் பட்டிருக்கும் ஐந்து முக்கிய துறைகளில் ஒன்றான விமானக் கேந்திர நிலையம் என்ற எண்ணக்கருவின் அடிப்படையிலான மற்றொரு நடவடிக்கையாகும். இது மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்திற்கு ஏற்ப நீலவானத்தை வெற்றி கொள்ளும் முயற்சி என கருதலாம்.

விமான போக்குவரத்து பாதுகாப்புக் குறித்து சர்வதேசத்தின் நம்பிக்கையை இலங்கை தற்போது வெற்றி பெற்றிருக்கிறது. 2010 ஆம் ஆண்டு மே மாதம் விமானப் பாதுகாப்பு தொடர்பாக நடாத்தப்பட்ட சர்வதேச விமான பாதுகாப்பு குறித்த ஆய்வு வேலைத்திட்டத்தின் படி, இலங்கை முழு உலகிலும் 17வது இடத்தைப் பெற்றுக்கொண்டது. இதனை தென்கிழக்காசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது அது 4வது இடத்தைப் பெற்றிருக்கிறது. அதே நேரம் சார்க் பிராந்தியத்தில் அதாவது தெற்காசியாவில் விமானப் பாதுகாப்பு விடயத்தில் இலங்கை முதலாவது இடத்தைப் பெற்று விளங்குகிறது. இவ்வாறு விமான போக்குவரத்து வரலாற்றில் இலங்கை முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. என்றாலும் யுத்தகாலத்தில் அதாவது 1997 ஆம் ஆண்டில் விமானப் பாதுகாப்பு தொடர்பாக நடாத்தப்பட்ட சர்வதேச ஆய்வின் போது நாம் தோல்வியடைந்தோம். பயங்கரவாத செயற்பாடு காரணமாக விமான நிலையத்தின் பாதுகாப்புக்கும் சுதந்திரமாக பறப்பதற்கும் இருந்த தடங்கல்களே இதற்கு அடிப்படைக் காரணம்.

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் 2013 மார்ச் 18 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

தற்போதைய சூழலின் கீழ் எமது ஆகாயத்தையும் எம் கட்டுப்பாட்டின் கீழ்





வைத்திருக்கும் போது ஏனைய காரணிகளும் விஸ்தரிக்கப்படல் வேண்டும். இவ்வாறான சூழ்நிலையில் நாம் ஒரு சர்வதேச விமான நிலையத்தை மாத்திரமே கொண்டுள்ளோம். ஆனால் இலங்கைக்கு இன்னொரு சர்வதேச விமான நிலையத்தின் தேவை நேற்று இன்று உணரப்பட்டதல்ல. இரண்டாவது சர்வதேச விமான நிலையம் எமக்கு ஏன் தேவைப்படுகின்றது? இது குறித்து விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியின் தலைவர் பிரசன்ன விக்கிரம சூரிய, பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“விமானமொன்று கட்டுநாயக்காவை நோக்கி பறந்து வந்து கொண்டிருக்கும் போது அதனை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தரையிறக்க முடியாத சூழ்நிலை ஏற்படுமாயின் அதனை அருகிலுள்ள விமான நிலையத்தில் தரையிறக்குவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு மேலதிகமாக வேறொரு சர்வதேச விமான நிலையம் உள்நாட்டில் இருக்கவில்லை. அவ்வாறான அவசர சந்தர்ப்பங்களில் நாம் எம் அயல் நாடான இந்தியாவின் சென்னை சர்வதேச விமான நிலையத்தில் தான் விமானங்களைத் தரையிறக்குவதற்குத் திருப்பி அனுப்பினோம். இதன்போது இலங்கைக்குப் பாரிய மேலதிக செலவினைப் பொறுப்பேற்க நேர்ந்தது.

கடந்த யுத்த காலத்தில் கட்டுநாயக்கா விமான நிலையம் தாக்கப்பட்டபோது கட்டுநாயக்காவுக்கு வருகை தந்த சகல விமானங்களையும் சென்னை சர்வதேச விமான நிலையத்திற்குத் திருப்பி அனுப்ப வேண்டிய நிலைமை ஏற்பட்டமை இதற்கு சிறந்த உதாரணமாகும். அதனால் பல மணித்தியாலங்கள், பல நாட்கள் விமானப் பயணிகள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தார்கள். இதன் விளைவாக சர்வதேச விமானங்கள் பல இலங்கைக்கு வருவதைத் தற்காலிகமாக இடைநிறுத்திக் கொண்டன. அதன் காரணமாகப் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு நாடு முகம் கொடுக்க நேரிட்டது.

தற்போது எமது விமான நிலையம் ஊடான விமானப்பாதைகளில் பயங்கரவாத அச்சுறுத்தல் இல்லை. என்றாலும் இன்னொரு விமான நிலையத்தினுள் பிரவேசிப்பதற்கு பயங்கரவாத அச்சுறுத்தல் மாத்திரம் காரணமாக அமைவதில்லை. மாறாக விமான ஓடுதளத்தில் அல்லது விமானம் தரையிறங்க முடியாதபடி காலநிலை மாற்றம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் இத்தடங்கள் வெளிப்படும். ஒரு மாதத்திற்கு முன்னர் வெளிநாடொன்றி லிருந்து வந்த தனியார் விமானமொன்று தரையிறங்கும் போது ஓடு தளத்தை விட்டு விலகியதால் விமான நிலையத்தைப் பல மணித்தியாலங்கள் மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதனால் ஓடு தளத்தை சீர்செய்து விமானம் தரையிறங்குவதற்கு ஏற்ப



நிலமையை உருவாக்கும் வரைக்கும் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தந்த பல விமானங்களை சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கே திருப்பி அனுப்ப வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால் பயணிகள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்ததுடன் வீணான செலவுகளையும் எதிர் கொள்ள நேரிட்டது. ஆனால் இன்னொரு விமான நிலையம் ஒன்று இருந்திருந்தால் இப்படியான நிலைமையைத் தவிர்த்து இருக்கலாம். ஆகவே மத்தள சர்வதேச விமான நிலையத்தின் தேவையை இது நன்கு தெளிவாக்கின்றது.

ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கும்




விமானம் ஒன்று திடீரென தரையிறங்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட முடியும். அதாவது பயணியொருவருக்குத் திடீரென அவசர மருத்துவ சேவை பெற்றுக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படல், அல்லது விமானத்தில் இயந்திரக் கோளாறு ஏற்படல், அல்லது தொடர்ந்து பயணிக்க முடியாதபடி சீரற்ற காலநிலை நிலவுதல் போன்றன இதற்குக் காரணங்களாக அமைய முடியும். அவ்வாறான சூழ்நிலையில் ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கும் விமானம் அருகிலுள்ள விமான நிலையத்தில் தரையிறக்க அனுமதி கோரும். அந்த வகையில் இலங்கையில் விமானம் பறப்பதற்கான வலயத்தின் ஊடாக பயணிக்கும் விமானமொன்றில் இவ்வாறான ஏதாவதொரு நிலைமை ஏற்படுமாயின் அவ் விமானம் கட்டுநாயக்காவில் அமைந்துள்ள கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கவே அனுமதி கோருகின்றது. இச்சமயத்தில் கட்டுநாயக்கா விமான நிலைய ஓடுதளம் அதற்கு தயாரான நிலையில் இல்லை என்றால் அவ்விமானத்தை சென்னைக்கு தான் அனுப்ப வேண்டும். ஏ 380 ரக விமானங்களை தரையிறக்கக் கூடிய வசதி கட்டுநாயக்கா விமான ஓடுதளத்தில் இல்லை. இதற்கான பிரதான காரணம் ஓடுதளம் அகலமின்மை. என்றாலும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் இக்குறைபாடு இல்லை. மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் ஓடுதளம் போதிய அகலத்தைக் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கின்றது.

### பயணிகள் கொள்ளளவு

இதேநேரம் கட்டுநாயக்கா விமான நிலையத்தைப் பயன்படுத்தும் விமானப் பயணிகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. குறிப்பாக 2012ம் ஆண்டினை எடுத்துப் பார்த்தால் இந்நாட்டுக்கு வருகை தந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்தது. அவர்கள் நாட்டின் பல மாகாணங்களுக்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்ட காலத்தில் உச்ச பயனைப் பெற்றுக் கொண்டார்கள்.

தென் மாகாணத்தின் ஹிக்கடுவ முதல் கிழக்கு மாகாணத்தின் அறுகம்பை, நிலாவெளி உள்ளிட்ட கரையோரங்கள் உல்லாசப் பயணிகள் பெரிதும் விரும்பும் இடங்களாக மாறியுள்ளன. என்றாலும் கொழும்பிலிருந்து இவ்விடங்களை உல்லாசப் பயணிகள் அடைவதற்கு 08-10 மணித்தியாலங்கள் செல்கின்றன. அதனால் கட்டுநாயக்காவுக்கு அருகிலுள்ள ஹோட்டல்களில் தங்கி இருந்த படி அவர்கள் உல்லாசப் பயணத்தை ஆரம்பிக்கின்றார்கள். ஆனால் மத்தள விமான நிலையத்திலிருந்து

முக்கிய சுற்றுலா இடங்களுக்கு குருகிய நேர காலத்திற்குள் பயணிக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. உதாரணமாக 2 மணித்தியாலங்களும் 45 நிமிடங்களில் நுவரெலியாவை அடைய முடியும். அறுகம்பையை 03 மணித்தியாலங்களில் அடையலாம். அத்தோடு ஹிக்கடுவையை 02 மணித்தியாலங்களில் அடைய முடியும். அதேநேரம் யால வனாந்திரத்திற்குச் செல்ல ஒரு மணித்தியாலத்திற்கும் குறைவான அதாவது 45 நிமிடங்களில் செல்லலாம். இது உல்லாசப் பயணிகள் எதிர்பார்க்கும் விஷேட அம்சமாகும். தாம் விரும்பும் இடங்களுக்கு குறுகிய நேர காலத்தில் துரிதமாக செல்லவே அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். மத்தள விமான நிலையத்தின் மூலம் இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியும்.

கட்டுநாயக்கா விமான நிலையம் வருடத்திற்கு சுமார் அறுபது இலட்சம் பயணிகளைக் கையாளக் கூடிய வசதியையே தற்போது கொண்டிருக்கின்றது. என்றாலும் 2012ம் ஆண்டில் 72 இலட்சம் (7.2 மில்லியன்) விமானப் பயணிகளைக் கட்டுநாயக்கா விமான நிலையம் கையாண்டு இருக்கின்றது. இது குறிக்கப்பட்ட கொள்ளளவை விடவும் அதிகமாகும். எனினும் இந்த எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்து வருகின்றது.

2016ம் ஆண்டாகும் போது இலங்கைக்கு இருபத்தைந்து இலட்சம் உல்லாசப் பயணிகளை கொண்டு வருவதே இலங்கை உல்லாச மேம்பாட்டு அலுவலகத்தின் இலக்காகும். அது மாத்திரமல்லாமல் இந்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையரின் எண்ணிக்கையும் அதிகம். மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்பவர்களும், தம்பதிவவுக்கு யாத்திரை மேற்கொள்பவர்களது எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இதன் காரணத்தினாலும் இந்நாட்டுக்கு இன்னொரு சர்வதேச விமான நிலையத்தின் தேவை பெரிதும் உணரப்பட்டிருக்கின்றது.

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் பத்து இலட்சம், அதாவது ஒரு மில்லியன் விமானப் பயணிகளைக் கையாளக் கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இதன் இரண்டாம் கட்டத்தின் கீழ் மேலும் ஐம்பது இலட்சம் அதாவது 5 மில்லியன் விமான பயணிகளுக்கு வசதிகளை வழங்கக் கூடிய வகையில் விரிவுபடுத்தப்படவிருக்கின்றது. இதன்படி கேள்விக்கு ஏற்ப விநியோக வழங்கலை மேற்கொள்ள வாய்ப்பு கிடைக்கின்றது.

**உள்நாட்டு பொறியியல் தொழில் நுட்பத்தில்**



**சர்வதேச தரம்**

அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள மத்தள பிரதேசம் சர்வதேச விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு ஏன் தெரிவு செய்யப்பட்டது? விமான நிலையமொன்றுக்கு ஓடு தளமே மிகப் பிரதானமானது. இதற்கு பெருமளவு நிலப்பரப்பு அவசியமானது. குறிப்பாக சர்வதேச விமான நிலையம்

பரப்பளவில் அதிக விசாலமானது. அதனால் இப்படியான ஒரு வேலைத்திட்டத்திற்கு மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத இடங்களைத் தான் தெரிவு செய்ய வேண்டும். அந்த வகையில் மக்கள் குடியிருப்புகள் அற்ற மத்தள பிரதேசமே இதற்காக தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. இது முற்புதர்கள் நிறைந்த காடாகும். அது மாத்திரமல்லாமல் விமான ஓடு தளமொன்றை நிர்மாணிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய சர்வதேச காரணிகள் பல உள்ளன.

இது தொடர்பாக சிவில் பொறியியலாளர்



(தரக் கட்டுப்பாட்டு மற்றும் பாதுகாப்பு) பி.ஐ.எஸ்.தஹநாயக்கா குறிப்பிடுகையில் “ஆகாயத்தில் காற்று வீசும் திசை, (மலைகள் போன்ற) தடங்கல்கள் இன்மை, விமான ஓடுதளம் அமைக்கப்படும் மண்ணின் தன்மை, நீர் சுலபமாக வழிந்தோடக்கூடிய நிலைமை போன்ற அம்சங்கள் கருத்திற் கொள்ளப்படும். இந்தடிப்படையில் சர்வதேச தரத்திற்கு ஏற்ப உச்ச அளவில் பொருத்தமான பூமியாக மத்தள இனம் காணப்பட்டது.

விமானமொன்று திடீரென ஓடுபாதையை விட்டு விலகினால் விமானத்திற்குப் பாரிய விபத்து ஏற்படுவதைத் தவிர்க்கக்கூடிய விஷேட பாதுகாப்பு ஏற்பாடு இருப்பது அவசியம். சர்வதேச தரத்திற்கு ஏற்ப விமான ஓடு பாதையின் 150 மீற்றர்கள் வரை இப்பாதுகாப்பு வலையத்தை ஏற்படுத்த வேண்டும். இதன்மூலம் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் விமானம் ஓடுபாதையை விலகிச் சென்றாலும் விமானத்திற்கு எந்தவிதப் பாதிப்புகளும் ஏற்படாது. ஏனெனில் ஓடுபாதையின் வெளிப்புறம் புதையாத வகையில் வெளிப்புறத் தளம் செப்பனிடப் பட்டிருக்கின்றது. இது பயணிகளின் பாதுகாப்புக்குப் பெரிதும் உதவியாக அமையும்.

தற்போது உலகிலுள்ள மிகப் பெரிய பயணிகள் விமானமான எயார் 380 ரக விமானத்தையும் இந்த ஓடுபாதையில் தரையிறக்க முடியும். ஓடுபாதை 75 மீற்றர்கள் அகலமும், 3.5 கிலோ மீற்றர்கள் நீளமும் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கின்றது.

கட்டுநாயக்கா பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய ஓடுபாதையின் அகலமோ 60 மிற்றர்களே. அதனால் ஏ 380 ரக எயார் பஸ் விமானங்களை இங்கு தரையிறக்க முடியாது. ஆனால் உலகிலுள்ள மிகப் பாரிய பயணிகள் விமானங்களையும் தரையிறக்கக் கூடிய வசதியைக் கொண்டதாகவே மத்தள சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டிருப்பது விஷேட அம்சமாகும்.

**பசுமை எண்ணக்கருப்படி அமைக்கப்பட்ட மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம்**

அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் நிலவும் அதிக உஷ்ண நிலையைக் கருத்தில் கொண்டு அதற்கு பொருத்தமான வகையில் இந்த ஓடுபாதை செப்பனிடப் பட்டிருக்கின்றது” என்று சிவில் பொறியியலாளர் எம்.எம்.ரசிகநாத் கூறினார்.

"அந்த வகையில் நவீனமாக்கப்பட்ட இறப்பர் கலவையைக் கொண்ட தாரைப் பயன்படுத்தி இந்நாட்டில் முதற்தடவையாக கார்பட் மூலம் இது அமைக்கப்பட்டிருக்கின்றது.

சாதாரண தாரைக் கொண்டு செப்பனிடப்படும் ஓடு பாதை வெப்பநிலை அதிகரிக்கும் போது உருகும் நிலைக்கும், வெப்பநிலை குறைந்து குளிர்வடையும் போது சுருங்கும் நிலைக்கும் உள்ளாகும். ஆனால் மத்தள விமான நிலைய ஓடு பாதைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள தார்



76 பாகை செல்சியஸ் வரை வெப்பநிலை அதிகரித்த போதும், அதேபோல் வெப்பநிலை 22 பாகை செல்சியஸ் வரை குறைவடைந்து குளிர்வடையும் போதும் எந்தவிதப் பாதிப்புக்கும் உள்ளாகாதவாறே அமைக்கப்பட்டுள்ளது. சாதாரணமாக அம்பாந்தோட்டையில் வெப்பநிலை 35 பாகை செல்சியஸாக உள்ளது. இங்கு சூழல் வெப்பநிலையுடன் சேர்ந்து ஓடுபாதையின் மேற்புற வெப்பநிலை 50 பாகை செல்சியஸாகக் காணப்படுகின்றது. என்றாலும் விமானநிலையத்தின் ஓடுபாதையின் மேற்புறப்பகுதி 76 பாகை செல்சியஸ் வரையான வெப்பநிலையைத் தாங்கக் கூடிய வகையில் செப்பனிடப் பட்டிருகின்றது. அதனால் பிரச்சினைகள் ஏதும் ஏற்படாது.

இந்த விமான நிலையத்தை சைனா ஹாபர் இன்ஜினியரிங் கம்பனியே நிர்மாணித்தது. என்றாலும் சகல நிர்மாண நடவடிக்கைகளையும் இலங்கைப் பொறியியலாளர்களே கண்காணிப்புச் செய்தார்கள். எமது சிவில் மற்றும் தொழில் நுட்பவியல் துறைப் பொறியியலாளர்களின் அறிவுத் திறனும், அர்ப்பணிப்பும் மத்தள விமான நிலையத்திற்குக் கிடைக்கப்பெற்றது. சர்வதேச தரத்திற்கு ஏற்ப நிர்மாணமும், கண்காணிப்பும் இடம்பெற்றமை பெரிதும் பாராட்டத்தக்கதாகும். அறிக்கை கட்டுப்பாடு, அறிக்கையிடல், பொறுத்தமற்ற வேலைகளைக் கட்டுப்படுத்தல், குறைபாடுகளையும் தவறுகளையும் தவிர்த்தல் போன்றவற்றை எமது






பொறியியலாளர்கள் மிகவும் சிறப்பான முறையில் மேற்கொண்டார்கள் என்பது சுட்டிக் காட்டத்தக்க விடயமாகும். இவ்விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காகப் பாவிக்கப்பட்ட மண் முதல் சிமேந்து வகைகள் வரையான சகல பொருட்களும் உயர் தரத்தை கொண்டவையாகவே தெரிவு செய்யப்பட்டு

பயன்படுத்தப்படுகின்றதா? என்பது தொடர்பாக அவர்கள் வேலைத் தளத்திலிருந்தபடியே அதிக கவனிப்பையும், கண்காணிப்பையும் மேற்கொண்டார்கள். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆய்வு கூடத்தில் மாதிரிகள் உருவாக்கப் பட்டு, பரீட்சிக்கப்பட்ட பின்பே நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப் பட்டன.

விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியின் பிரதம சிவில் பொறியியலாளர் (Planing & Designs) ஞானசிறி விதானகே குறிப்பிடுகையில், "விமான ஓடுபாதை நிர்மாணிக்கப்படும் போது காற்று வீசும் திசை கருத்தில் கொள்ளப்படும். விமானமொன்றைத் தரையிறக்கும் போதும் தரையிலிருந்து வான் நோக்கி பறக்கும் போதும் காற்றின் திசை எதிர் மாறாக அமையும். இதனை கருத்தில் கொண்டு வடக்கு திசையிலிருந்து கோணங்களின் அளவை மதிப்பிட்டு சரியான தரத்திற்கு ஏற்ப மத்தள விமான நிலைய ஓடுபாதை நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. சுற்றாடலின் வெப்பநிலை அதிகரிக்க அதிகரிக்க ஓடுபாதையின் நீளமும் அதிகரிக்க வேண்டும். விமானத்தை கையாள்வதற்கு ஓடுபாதையின் வெப்பநிலையும் தாக்கம் செலுத்தும். இவ்வாறு ஓடுபாதையை அமைக்கையில் கடல் மட்டத்திலிருந்து உயரம் அதிகரிக்கும் போது ஓடுபாதையின் நீளமும் அதிகரிக்க வேண்டும். அதனுடன் விமானம் பறக்கும் தூரம், விமானத்தின் எரிபொருள் அளவு, பயணிகள் மற்றும் பொருட்களின் அளவு போன்ற விடயங்களிலும் கவனம் செலுத்தி நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையிலேயே மத்தள விமான நிலைய ஓடுபாதை அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஓடுபாதையின் நீளம் 3500 மீற்றர்கள் ஆகும். ஆனால் மத்திய கிழக்கு நாடுகளில் 4500 மீற்றர்கள் நீலத்திற்கே ஓடுபாதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு வெப்பநிலை அதிகரிப்பை அடிப்படையாகக்



கொண்டே அவை அமைக்கப்பட்டிருக்கின்றது.ஆனால் எமக்கு 3500 மீற்றர்கள் நீளம் போதுமானது.

**பசுமை எண்ணக்கருவின் விமான நிலையம்**

ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனிக்கு சொந்தமாக இருக்கும் 10 ஏ 320 ரக எயார் பஸ் விமானங்களை ஒரே நேரத்தில் நிறுத்தி வைக்கக்கூடிய விமானத்தரிப்பிடம் மத்தள விமான நிலையம் தற்போது கொண்டிருக்கிறது. இரண்டாவது கட்டத்தின் கீழ் 20 விமானங்களை நிறுத்தி வைக்கக் கூடிய வசதி கிடைக்கும். சிவில் பொறியியலாளர் கெலும் சிறிவர்தன குறிப்பிடுகையில் அசுத்தமடைகின்ற 2 லட்சம் லீற்றர்கள் வரையான நீரை சுத்திகரிப்பதற்குக் கூடிய வசதியும் பசுமை எண்ணக் கருவை அடிப்படையாகக் கொண்டு இவ்விமான நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்குரிய இடவசதியும் காணப்படுகிறது. இங்கு பருகுவதற்கு ஏற்ற வகையில் நீர் சுத்திகரிக்கப்பட்டாலும் அது பயிர்களுக்கும் வீட்டுத்தோட்டத்திற்குமே பயன்படுத்தப் படுகிறது. திடீர் தீ விபத்துக்கள் ஏற்படுமாயின் அதனை கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்துவதற்கென 5 இலட்சம் லீற்றர் கொள்ளளவைக் கொண்ட இரண்டு நீர்த்தாங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன.

விமான பயணிகள் இறங்குதளம் பசுமை எண்ணக்கருவுக்கு முன்னுரிமை அளித்து நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கட்டிடத்திற்கு உள்ளே குறைந்த வெப்பநிலையைப் பேணுவதற்காகவும் உட்பகுதி குளிர் நிலையைக் குறைந்த மட்டத்தில் வைத்துக் கொள்வதற்காகவும் ஏற்ற வகையிலான கண்ணாடிகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. கட்டிடத்தின் சில பகுதிகளுக்கு சூரிய ஒளியைக் கொண்டு மின்சக்தி பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. மின்சக்தி பயன்பாடு இங்கு பெரிதும் கருத்தில் கொள்ளப்படும் விடயமாகும்.

இது தொடர்பாக பிரதம சிவில் பொறியியலாளர் சித்ராங்கனி ஹேரத் குறிப்பிடுகையில், கட்டிடத்தினுள் சூரிய ஒளி அதிகளவில் வருமாயின் உட்பகுதி வெப்பநிலை அதிகரிக்கும். இதனைத் தவிர்ப்பதற்காக கட்டிடத்தின் வெளிப்பகுதி முதல் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டிருக்கின்றது. அதனால் தான் கட்டிடத்தின் ஒரு பகுதிக்கு சூரிய ஒளியிலிருந்து நேரடியாக மின்சக்தி பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. கண்ணாடி சுவர் பயன்படுத்தப்பட்டுள்ள இடங்களின் ஊடாக உஷ்ணம் உள்ளே பிரவேசிக்காத வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விமான இறங்கு தளத்திற்கும், விமான கட்டுப்பாட்டு கோபுரத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ள கண்ணாடி வெளியே உள்ள உஷ்ணம் உள்ளே பிரவேசிக்காத வகையிலும் உள்ளே உள்ள குளிர்நிலை சற்றும் குறையாத வகையிலும் பேணக்கூடிய வகையிலுள்ளது. அது மாத்திரமல்லாமல் இயற்கை வெளிச்சம் சிறந்த முறையில் உள்ளே வரக் கூடியவகையில் இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருப்பது விஷேட அம்சமாகும்.






இந்த பயணிகள் இறங்கு தளக் கட்டிடம் ஒரு ஹெக்டேயர் பரப்பளவில் அமைக்கப் பட்டுள்ளது. இக்கட்டிடத்தின் கீழ் மாடி 12000 சதுர மீற்றர்கள் பரப்பளவைக் கொண்டது. மேல் மாடியின் மொத்தப்பரப்பளவு 13300 சதுர மீற்றர்கள் ஆகும் என்று இறங்கு தளக் கட்டிடத்திற்குப் பொறுப்பான சிவில் பொறியியலாளர் டி.எஸ்.கே.ஜயசிங்க கூறுகிறார்.

அவர் மேலும் கூறுகையில் "இது நடு முற்றத்துடன் நிர்மாணிக்கப்பட்டிருப்பதால் மிக அழகாக அமைந்துள்ளது. இதன் பயனாக விமான நிலையத்தின் உள்ளே வரும் பயணிகளும், வெளியே செல்லும் பயணிகளும் கலப்பது தவிர்க்கப்படுகின்றது. அதாவது நாட்டிலிருந்து வெளியாகும் பயணிகளுக்கும், நாட்டுக்கு உள்ளே வரும் பயணிகளுக்கும் தனித்தனியான வழிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் உள்ளே வரும் பயணிகளுக்கும், வெளியே செல்லும் பயணிகளுக்கும் இருப்பதோ ஒரே வழி தான்.

இந்த விமான நிலைய இறங்கு தளம் சுகாதாரம், தாவரம் மற்றும் உயிரியல் நோய் காப்புப் பிரிவு, சுங்க குடிவரவு மற்றும் குடியகழ்வு முக்கியஸ்தர்களுக்கான மண்டபம், ஓய்வு கூடம், வரி விலக்களிக்கப்பட்ட கடைத் தொகுதி, சிற்றுண்டிச்சாலை உட்பட ஏனைய அடிப்படை வசதிகளையும் உள்ளடக் கியுள்ளது.

அதே நேரம் இவ்விமான நிலையத்தில் உள்ளூர் விமானப் போக்குவரத்துக்கு தேவையான தனியான பிரிவும் அமைக்கப்பட்டிருப்பதும் இங்கு விஷேட அம்சமாகும். விமான நிலையத்திற்குள் பிரவேசிக்கும் நுழைவாயில் கட்டிடம் கண்டி கலை பாரம்பரியத்திற்கு ஏற்ப உள்ளூர் கட்டிடக் கலைஞர்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதேநேரம் விமானத்தில் ஏறுவதற்கு முன்னர் தரித்திருக்கும் மண்டபமும் நவீன கட்டிடக் கலை கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும் வெளிநாடுகளிலிருந்து இந்நாட்டுக்கு வருகை தரும் வெளி நாட்டவருக்கு இலங்கைக்கு வந்துள்ளோம் என்ற உணர்வை ஏற்படுத்தக் கூடியவகையில் உள்ளூர் கட்டிடக் கலை பாரம்பரியப்படி வருகை தளம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

## பொருளாதார இலாபம்

மத்தள சர்வதேச விமான நிலையம் பொருட்களைக் கையாளுவதில் 60 வீதமான பங்களிப்பை நல்கும். 40 வீதமே பயணிகள் சேவையை மேற்கொள்ளும். ஆகாயமார்க்கமாக பொருட்களைக் கையாளு வதற்காக ஐயாயிரம் சதுர மீற்றர்கள் பரப்பளவைக் கொண்ட பொருட்கள் தளமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதனூடாக வருடத்திற்கு 45,000 மெற்றிக் தொன் பொருட்களைக் கையாளுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இரண்டாம் கட்ட நிர்மாணத்தின் கீழ் 150,000 மெற்றிக் தொன்கள் வரையான பொருட்களைக் கையாள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்றுமதிக்குத் தயாரிக்கப்படும் பொருட்களை

வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்குரிய வசதியை இந்த விமான நிலையம் கொண்டுள்ளது. அதே நேரம் இங்கு அலங்கார மீன்களை விருத்தி செய்யவும் பதனிடப்பட்ட மரக்கறி மற்றும் பழவைககளை ஏற்றுமதி செய்யவும் எதிர் பார்க்கப் படுகின்றது. அலங்கார மீன்களை விருத்தி செய்வதற்கான மத்திய நிலையத்தை அமைப்பதற்கு இப்பிரதேச காலநிலை பெரிதும் பொருத்தமாக அமையும். இதனை விமான நிலையத்திற்கு அருகில் அமைப்பதன் மூலம் அதிக செலவின்றி அலங்கார மீன்களை ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்பு கிடைக்கும். இது ஏற்றுமதி யாளர்களுக்கு அதிக நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கக் கூடியதாக அமையும். நுகர்வோருக்கு இலகுவாக நுகரக் கூடியவகையில் பதனிடப்பட்ட பழவகை களையும், மரக்கறி வகைகளையும் ஏற்றுமதி செய்வது மற்றொரு எதிர்பார்ப்பாகும்.

மேலும் அம்பாந்தோட்டை, மாத்தறை, மொனறாகலை, இரத்தினபுரி போன்ற மத்தளை விமான நிலையத்திற்கு அருகிலுள்ள மாவட்டங்களில் ஏற்றுமதி விவசாயப் பயிர்களை விரிவுபடுத்துவதும் இன்னொரு எதிர்பார்ப்பாகும். தென் மாகாணத்தின் காலி கரையோரத்திலிருந்து கிழக்கு மாகாணத்தின் பொத்துவில் கரையோரம் வரை அபிவிருத்தி செய்வதன் மூலம் உல்லாச பயணத்துறைக்கு புத்தூக்கமளிக்க முடியும். மத்தளை சர்வதேச விமான நிலையத்திலிருந்து மேற்படி பிரதேசங்களுக்கு இரண்டு, மூன்று மணித்தியாலங்களில் பயணிக்க முடியும் என்பது மிக முக்கிய விடயமாகும். இது உள்ளூர், வெளியூர் உல்லாசப்பயணி களுக்குப் பெரிதும் நன்மை பயக்கும். சுற்றுலாத் துறைக்கு பெறுமதி சேர்க்கும் பல முக்கிய அம்சங்களுக்கு மத்தியில் தான் மத்தள விமான நிலையம் அமைக்கப் பட்டுள்ளது. குறிப்பாக புத்தள வன விலங்குகள் சரணாலயம், குமண பறவைகள் சரணாலயம், விவசாய கைத்தொழில் வலயம், கதிர்காமம், கிரிந்த போன்ற சமய, கலாசார முக்கியத்துவம் மிக்க இடங்கள், வனவளப்பாதுகாப்பு வலயம், கரையோரம் போன்ற முக்கியத்துவம் மிக்க இடங்கள் இங்குள்ளன. வரண்ட வலயத்தில் தரை இறங்கி இரண்டரை மணித்தியாலங்களில் குளிர்கால நிலைமிக்க நுவரெலியாவுக்குப் பயணிக்க முடியும். விமான நிலையத்தின் செயற்பாடு வேகமடையும் போது இதனைச் சூழவுள்ள பிரதேசங்களும் துரிதமாக வளர்ச்சி அடையக் கூடிய சூழல் நிலவுகின்றது. அம்பாந்தோட்டை சர்வதேச விளையாட்டரங்கு, சர்வதேச தரத்திலான மாநாட்டு மண்டபம், துறைமுகம், மாத்தறை-கொழும்பு அதிவேக நெடுஞ்சாலை உள்ளிட்ட ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளும் அபிவிருத்தி அடைந்துள்ளதால் இதன் பெறுமதி இன்னும் அதிகரிக்கும். இதற்கு சிவில் விமான போக்குவரத்து அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் முக்கியபங்காற்ற வேண்டும். குறித்த உள்ளூராட்சி மன்றம் இப்போதிருந்தே தேவையான உட் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. விமான நிலையத்திற்கு அருகிலுள்ள நகர்களில் விமான நிலையத்திற்கு வருகை தருபவர்களுக்காக தொடர்பாடல் மத்திய நிலையம்,



சிற்றுண்டிச்சாலை உல்லாச ஹோட்டல் போன்ற அடிப்படை வசதிகளை வழங்க வேண்டும். பிரதான வீதிக் கட்டமைப்பு மாத்திரமல்லாமல் ஏனைய அவசிய வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவை மாத்திரம் இலக்காகக் கொண்டதாக அல்லாமல் உள்ளூர் உல்லாசப் பயணிகளையும் கருத்தில் கொண்டதாக இருக்க வேண்டும். அவை அவர்களது பொருளாதாரத்திற்கு ஏற்ற வகையில் அமைவது முக்கியம்.

### உல்லாசப் பயணிகளுக்கு வசதி

அம்பாந்தோட்டை மாவட்டம் மாத்தறை, இரத்தினபுரி, மொனறாகலை ஆகிய 03 மாவட்டங்களை எல்லைகளாக கொண்ட மைந்துள்ளது. இம் மாவட்டங் களிலிருந்து கொழும்பை விடவும் குறுகிய நேரத்தில் மத்தள விமான நிலையத்திற்குப் பயணிக்க முடியும்.பொதுவாக கருத்தில் எடுத்துக் கொண்டால் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்பவர்களும், தம்பதிவவுக்கு யாத்திரை செல்பவர்களும் இவ்விமான நிலையத்தை சரியாகப் பயன்படுத்த முடியும் என்று விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியின் தலைவர் பிரசன்ன ஜே. விக்கிரம சூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, “மத்தள விமான நிலையத்தை 9 மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் இலகுவாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். மொனறாகலை, மாத்தறை, அம்பாந்தோட்டை, காலி, அம்பாறை, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, மட்டக்களப்பு ஆகியனவே அந்த மாவட்டங்களாகும்.

2011ம் ஆண்டு புள்ளிவிபரவியல் தகவல் களின் படி 2,62,960 பேர் வெளிநாடு சென்றுள் ளார்கள். இவர்களில் 28 வீதமானோர் அதாவது 73,652 பேர் மேற்படி ஒன்பது மாவட்டங்களையும் சேர்ந்தவர்களாவர். இவர்களில் 68385 பேர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ளனர். இதன்படி இந்த 9 மாவட்டங்களிலிருந்தும் 93 வீதமானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கே சென்று இருக்கின்றார்கள். மத்தள விமான நிலையத்தின் நிர்மாணமும், வருகையும் அவர்களுக்கு பாரிய வரப்பிரசாதமாக அமையும். அதே நேரம் இப்பிரதேசங் களிலிருந்து மத்தள விமான நிலையத்திற்கு செல்வதை விடவும், கட்டுநாயக்கா விமான நிலையத்திற்குச் செல்வதற்கு அதிக செலவு ஏற்படும். மத்திய கிழக்குக்கான விமான சேவையை மத்தளையிலிருந்து சரியான முறையில் செயற்படுத்தினால் அவர்களுக்கு சிறந்த சேவையாக அமையும்.

சவூதி அரேபியாவின் ரியாத், சீனாவின் ஷெங்ஹாய் மற்றும் பீஜிங், மாலைதீவின் மாலை, இந்தியாவின் புத்த காயா போன்ற இடங்களுக்கு விமான சேவையை இங்கிருந்து நடத்துவதற்கு ஶ்ரீ லங்கன் எயார் லைன்ஸூம், மிஹின் எயாரும் தயாராக உள்ளன. மத்தள விமான நிலையத்திற்கு வருகை தரவென தற்போது பல விமான கம்பனிகள் நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளன. இதேவேளை பல சர்வதேச



விமானங்கள் மத்தளவுக்கு வருகை தருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன. எமிரேட்ஸ், எயார் அரேபியா, கட்டார் எயார்வெய்ஸ், பிளை டுபாய் போன்ற விமான கம்பனிகள் அவற்றில் குறிப்பிடத்தக்கவை. இதேநேரம் எயார் ஏசியா விமானக் கம்பனியுடன் பேச்சுவார்த்தைகளும் இடம் பெற்று வருகின்றன.

விமான நிலைய அபிவிருத்தி திட்டத்தைத் தொடர்ந்து அருகிலுள்ள பிரதேசங்களில் வாழும் பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளவும் முடிந்துள்ளது. சுமார் 1500 நேரடி வேலை வாய்ப்புகள் உருவாகி யுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. என்றாலும் மறைமுகத் தொழில் வாய்ப்பு பெருமளவில் உருவாகி இருக்கலாம் என நம்பப்படுகின்றது. தற்போது மத்தள வேலைப் பிரதேசத்தில் கிராம இளைஞர்களும் கடமையாற்று கின்றார்கள். ஆரம்பத்தில் எல்லை அமைக்கும் பணிகளில் சாதாரண தொழிலாளராக வேலையில் இணைந்த மேல் மத்தள கிராமத்தைச் சேர்ந்த எஸ்.ஆர். நிமலசிறி தற்போது நல்ல சம்பளத்துடன் விமான பயணிகள் தளத்தில் வேலைப் பரிசோதகராகக் கடமையாற்றுகிறார். மேல் மத்தள மற்றும் கீழ் மத்தள கிராமங்களைச் சேர்ந்தவர்கள் முதலில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். 2008ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் திகதி முதல் இவர்கள் வேலை செய்கின்றார்கள். இங்கு மேல் மத்தளவைச் சேர்ந்த 68 பேர் வேலைக்குச் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். வயது கூடியவர்கள் காவலாளிகளாகவும், இளைஞர்கள் தொழிலாளர்களாகவும் வேலை வாய்ப்பு பெற்றுள்ளார்கள். தற்போது கிராமத்திலுள்ள வீடுகளில் அறைகள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன. அத்தோடு உணவு மற்றும் குடிபானம் வழங்குவதன் மூலமும் கடைகளை ஆரம்பிப்பதன் மூலமும் மேல் மத்தள மற்றும் கீழ் மத்தள கிராமத்தவர்கள் வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.

தற்போது நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருப்பவர்களில் பெரும்பாலானோர் அருகிலுள்ள கிராமங்களில் வசிப்பவர் களாவர். அதேநேரம் வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனி விமான நிலைய பாதுகாப்பு சேவை, தீயணைப்பு சேவை போன்ற துறைகளுக்காக பயிற்சி பாடநெறிகளை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்துவற்குரிய வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கும் எதிர்பார்க்கப் படுகின்றது.

பிரசாரம்

மத்தள சர்வதேச விமான நிலையம்



தொடர்பாக உள்நாட்டில் பிரசாரம் செய்வதை விடவும் வெளிநாடுகளில் தான் அதிகளவில் பிரசாரம் செய்ய வேண்டும். அதுவே முக்கியமானது. வெளிநாட்டுச் சஞ்சிகைகள், வெளிநாட்டுத் தொலைக்காட்சிகள், இணைய தளம் உட்பட ஏனைய வழிகளையும் பயன்படுத்தி விரிவான அடிப்படையில் பிரசாரம் செய்ய வேண்டும். அதனூடாக உல்லாசப் பயணத்துறை மேம்பாட்டுக்கு பாரிய பங்களிப்பு செய்யலாம்.

அம்பாந்தோட்டையில் தரையிறங்குவதன் மூலம் கிடைக்கப் பெறும் நன்மைகள் குறித்து வெளிநாட்டவர்களைத் தொடராக அறிவூட்ட வேண்டும். இவ்விடயத்தில் உல்லாசத்துறை அதிகாரிகளும், தூதரகங்களும் பொறுப்புடன் கடமையாற்றுவது அவசியம். நாட்டுக்குள் எவ்வளவுதான் விரிவான அடிப்படையில் பிரச்சாரத்தை மேற்கொண்டாலும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கும், சர்வதேச விமான கம்பனிகளுக்கும் இங்குள்ள நன்மைகள் குறித்து தேவையான அறிவூட்டல்கள் வழங்கப்படாவிட்டால் பயன் இல்லாமல் போய் விடும்.

இலங்கை பிரித்தானியாவின் காலனி நாடாக இருந்த போது அம்பாந்தோட்டை அரசாங்க அதிபராக இருந்த லேனார்ட் டுல்ப் ஷவிலேஜ் இன் த ஜங்கில்' என்ற பெயரில் நூலொன்றை எழுதினார். அந்நூலை பெத்தேகம என்ற பெயரில் மொழி பெயர்ப்பு செய்து, அதி வரண்ட பிரதேசத்தில் அமைவுற்றிருக்கும் அம்பாந்தோட்டையின் சுற்றாடலையும், அங்கு வாழும் மக்களின் வாழ்வையும் உலகிற்குக் காட்ட முடிந்தது. மத்தள சர்வதேச விமான நிலையம் அன்று பெத்தேகமவுக்கு அடிப்படையாக அமைந்த பபுன்லா, சிலிதுன்லா வசித்த வனாந்தர கிராம வீட்டு எல்லையிலேயே அமைக்கப்பட்டுள்ளது. அன்று பெத்தேகம ஆக விளங்கிய மீகஹஜதுர என்ற கிராமம் ஊடாக இன்று பயணிப்பது மத்தள சர்வதேச விமான நிலையத்தின் மூலம் உலகிற்காகும். அதற்கான வழி இதன் மூலம் திறந்துள்ளது.

# ஜனாதிபதி திறந்து வைத்த இரணைமடு ஓடுதளம்!




இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான எம்.ஏ.60 விமானத்தில் இரணைமடு விமான ஓடு பாதையில் ஜனாதிபதி தரையிறங்கி உத்தியோகபூர்வமாக அதனைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி- இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்த ஆகியோரும் கலந்துகொண்டனர்.மாங்குளம் அம்பகாமம் ஒலுமட ஊடாக அல்லது கிளிநொச்சி- வட்டக்கச்சி- இராமநாதபுரம் ஆகிய இடங்களின் ஊடாக இரண்டு வழிகளிலும் சென்று விமானங்கள் தரையிறங்கக் கூடிய வகையில் இரணைமடு ஓடுதளம் அமைக்கப்பட்டுள்ளது.யுத்தம் முடிவடைந்த பின்னர் கடந்த 2011ஆம் ஆண்டு ஒகஸ்ட் இரணைமடு விமான ஓடுதளத்தைப் புனர்நிர்மாணிக்கும் பணிகள் விமானப் படையினரால் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.



# பொதுநலவாய மாநாட்டிற்கான இணையத்தளம்

CHOGM 2013 Sri Lanka
COLOMBO
10-17 NOVEMBER 2013






நவம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெற விருக்கின்ற பொதுநலவாய உச்சி மாநாட்டிற்கான உத்தியோகபூர்வ இணையத்தளம் 2012 ஜுன் 17ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

வெளிவிவகார அமைச்சில் வைத்தே www.chogm2013.lk எனும் இந்த இணையத்தளம் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசினால் திறந்து வைக்கப் பட்டது.

இந்த வைபவத்தில் மக்கள் தொடர்பாடல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, வெளிவிவகார பிரதி அமைச்சர் நிவ்மோல் பெரேரா ,மக்கள் தொடர்பாடல் மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் சரித்த ஹேரத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

“பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக ஒழுக்கநெறி“ எனும் தொனிப்பொருளிலேயே இந்த மாநாடு இம்முறை நடத்தப்பட விருக்கின்றது.


இந்த மாநாட்டில் உலகளாவிய ரீதியிலிருந்து 53 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கவிருக்கின்றனர். ஆசியாவில் இந்த மாநாட்டை நடத்துவதற்காக 24 வருடங்களுக்கு பின்னர் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதென அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.




# பனந்தொழிற்துறையை மேம்படுத்த அமைச்சரவைப் பத்திரம்



பனைவளம் சார்ந்த தொழிற்துறைகளை நவீனப்படுத்தி விரிவாக்கி உற்பத்திகளின் தரங்களை மென் மேலும் மேம்படுத்துவதற்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் துள்ளார். கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தில் இடம்பெற்ற பனை அபிவிருத்தி சபைக்கென புதிதாக நியமனங்களை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.




# சீன மொழியில் மஹிந்த சிந்தனை


马欣达思想
对未来的憧憬

更光明的未来

•新世兰卡：正在崛起的"亚洲奇迹"
•繁荣的国家；富饶的土地
•遵纪守法的社会
•舒适、便捷、满意的生活方式
•完善的路网和交通系统
•不容分裂的统一国家
•共同的价值、快速的发展和持久的和平
•保护动物和植物
•优先考虑青年人
•聚焦现代教育和知识体系
•健康的社会
•用实力赶超世界的企业家
•表演艺术的觉醒
•"人才流入"取代"人才流失"

我们打破了恐怖主义和分裂主义；
这个结果一度被认为是不可能实现的。
我们现在准备把我们的孩子和我们的
国家带向更加光明的未来——
一个真正自由的祖国。

3


为赢得世界而发展国家
为发展国家而加强村庄
为加强村庄而保护家庭
为保护家庭
而关心每个人

通过吸收你们思想的精华
完成了
《马欣达思想》一书
通过你们所给的鼓励
我们实现了你们的愿望

我曾说过
我承诺给你们一个自由的国家
我承诺给你们可持续的发展
我保证给你们更好的社会
我保证给你们富裕的土地

[illegible]的孩子们
僧伽罗人、泰米尔人、穆斯林、马来人和伯格人
期待着我们成为
他们的受托人
并实现他们的梦想

我将要说
现在我给你们带来了
我们对更美好未来的憧憬
让我带着你们的信任
一起出发吧



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் "மஹிந்த சிந்தனை " சீன மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.நான்கு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீனா சென்ற போது சீன ஜனாதிபதி, இந்த புத்தகத்தை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம், கையளித்தார்.

மஹிந்த சிந்தனையை சீன மொழியில் வாசித்த சீனர்கள் இதில் அடங்கியுள்ள விடயங்களை விதந்துரைத்தனர். என ஜனாதிபதியுடன் சீனச்சுற்றுலாவில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்தார்.

சீன பல்கலைக்கழகங்களிலும் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிலும் இந்த மஹிந்த சிந்தனை ஆய்வுகளுக்கு உட்படுத்தப் பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர் மேலும் தெரிவித்தார்.

"மஹிந்த சிந்தனை எனும் இலங்கையின் எதிர்காலத் திட்டம் எம்மை உற்சாகப்படுத்தக் கூடிய விதமாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்டுள்ள ஒரு பிரகடனமாகும் என சீனாவின் உப ஜனாதிபதி லீ யூவான்(li yuanchao) பெருமிதத்துடன் தனது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

மே மாதம் 30 ஆம் திகதி சீனாவின் ஷாங்ஷி மாகாணத்தில் நடைபெற்ற "பசுமையான அபிவிருத்தியை முன்னெடுத்து ஒரு அழகிய ஆசியாவை உருவாக்குவோம் என்ற தொனிப்பொருளில் இந்த மாநாடு இடம்பெற்றது. இதில் வரவேற்புரை நிகழ்த்தியபோதே சீனாவின் உப ஜனாதிபதி மஹிந்த சிந்தனையைப் பற்றி இவ்வாறு புகழாரம் சூட்டினார். இதேவேளை நாட்டுத் தலைவர் ஒருவரின் தேசிய அபிவிருத்தித் திட்ட விஞ்ஞாபனம் ஒன்றை பிறிதொரு நாடு தமது தேசிய மொழியில் பிரசுரிப்பது என்பது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# தாமரைக் கோபுரம்

## சுழலும் உணவகம், பார்வைக்கூடம் என்பவற்றை உள்ளடக்கிய பல்தொடர்புக் கோபுரம்

தகவல் தொழிநுட்பத்துறையில் பாரிய புரட்சியை ஏற்படுத்தும் வகையில் “தாமரைக் கோபுரம்” எனப்படும் தொலைத்தொடர்புத் தொடர்பாடல் கோபுரத்தை அமைப்பதற்கான ஒப்பந்தமொன்று அண்மையில் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையுடன் சீனாவின் இரண்டு அரச நிறுவனங்கள் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் இலங்கைத் தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷபல்பிட்ட இலங்கையின் சார்பில் கையெழுத்திட்டார். இந்த கோபுரத்தின் நிலத்துக்கடியிலான நிர்மாணப்பணிகள் தற்சமயம் நடைபெறுகின்றன.

கொழும்பு டீ.ஆர். விஜேவர்தன மாவத்தையில் பேரை வாவிக்கு அருகாமையில் காணப்படும் மூன்று ஹெக்டேயார் நிலப்பரப்பில் இப்பல்லிணைப்புத் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கப்படவுள்ளது.

இக்கோபுரமானது 350 மீட்டர் (1100 அடி) உயரம் கொண்டதாக இருக்கும். ஆசியாவிலே மிக உயரமான கோபுரமாகவும் கொழும்பு நகரின் அழகுக்கு மேலும் மெருகூட்டும் அடையாளச் சின்னமாகவும் இது அமையுமென திரு. அனுஷபல்பிட்ட குறிப்பிடுகிறார்.

எட்டு மாடிகளைக் கொண்ட இந்தக் கோபுரம் தொலைத்தொடர்பு மற்றும் ஒலி, ஒளிபரப்பு வசதிகளையும் வழங்குவதுடன் ஓய்வு நேரங்களை உல்லாசமாகக் கழிக்கக் கூடிய வசதிவாய்ப்புகளையும் கொண்டிருக்கின்றது. இதன் மூலம் 50 வானொலி அலைவரிசைகள், 50 தொலைக்காட்சி சேவைகள், 20 தொலைத்தொடர்பு சேவைகள் இயங்குவதற்கான வசதிகளையும் ஏற்படுத்த முடியும்.

இது தவிர இக்கோபுரம் அமையப் பெற்றதும் தற்போது கொழும்பு நகரின் பல்வேறு கட்டடங்களில் பொருத்தப்பட்டிருக்கும் அதி வலு கொண்ட வானொலி மற்றும் எப்.எம். அண்டனாக்களைக் குறைக்கவும் அகற்றவும் வழி பிறக்கும்.

எட்டு மாடிகளைக் கொண்ட இக்கோபுரத்தில் ஒளி-ஒலிபரப்புக்கான பல்சேவைகளை வழங்கக்கூடிய, தொலைத்தொடர்பு சேவை தொடர்பான நூதனசாலை, உணவகம், நிர்வாகப் பணிமனை காட்சியறைகள் என்பன ஒருங்கே அமைக்கப்பட இருக்கின்றது.

மேலும் கலையகம், சுழலும் சிற்றுண்டிச்சாலை, ஆயிரம் விருந்தினர்கள் கலந்து கொள்ளக் கூடிய உற்சவமண்டபம், உல்லாசப் பயண ஹோட்டலுக்குப் பயன்படுத்தக்கூடிய இரு மாடிகள் என்பவற்றையும் உள்ளடக்கியதாகும்.



# தெற்கு அதிவேக நெடுஞ்சாலை

தற்கால மனிதன் நேரம் போதாது என அடிக்கடி அங்கலாய்த்துக் கொள்வதை அவதானிக்கிறோம். அதேவேளை நேரம் பொன்னானது என்பதும் நாம் எல்லோரும் ஏற்றுக் கொள்கின்ற ஒரு விடயமாகும்.

அபிவிருத்தியடைந்து வரும் இலங்கை போன்ற நாடுகளில் போக்குவரத்துக்காக அதிக நேரம் விரயமாக்கப்பட்டு வருகின்றமை நீண்ட காலமாக முன் வைக்கப்பட்டு வரும் ஒரு குற்றச்சாட்டாகும். நெடுஞ்சாலைகளில் பாதை சீராக இல்லை, சில இடங்களில் போதிய அகலமில்லை, எல்லா வகையான வாகனங்களும் ஒரே நேரத்தில் செல்கின்றமையால் வாகன நெரிசல் முதலான காரணங்களால் ஒரு குறுகிய தூரப் பயணத்திற்கும் நீண்ட நேரத்தை செலவிட வேண்டியேற்படுகிறது முதலான நீண்டகால்க் குற்றச்சாட்டுக்கள் அண்மைக்காலமாகக் குறைந்து வருகின்றதையும் அவதானிக்கிறோம். மேலும் பரவலாக நாடு முழுவதும் வீதி அபிவிருத்திகள் நடைபெற்று வருகின்றன. பாதைகள் நவீனமயப்படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்தல், பாதைகளுக்கு கொங்கிரீட் மற்றும் காபட் இடுதல் முதலான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாதைகள் இவ்வாறு அபிவிருத்தி செய்யப்படுவதோடு அவற்றில் காணப்பட்ட பழுதடைந்த பாலங்கள் புதுப்பிக்கப்பட்டும், ஒடுக்கமான பாலங்கள் சாலையின் அகலத்துக்கேற்றவாறு விரிவுபடுத்தப்பட்டும், பாலங்கள் இல்லாதிருந்த இடங்களில் மிதக்கும் பாதைகளுக்குப் பதிலாக நவீன பாலங்கள் அமைக்கப்பட்டும் தற்போது இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் காணப்படும் நெடுஞ்சாலைகள் மனதைக் கவர்வனவாக அமைந்துள்ளன.

இதன் மூலம் கிடைக்கும் மிகப் பெறுமதி வாய்ந்த நன்மை யாதெனில் பொன் போன்ற நேரத்தைச் சேமிக்க முடிவதாகும். வடக்கு, கிழக்கு, ரஜரட்டை போன்ற பிரதேசங்களுக்கு உல்லாசப் பயணங்களை அல்லது யாத்திரைகளை மேற்கொள்ள முன்னர் ஐந்து நாட்களை எடுத்த பிரயாணத்தை நெடுஞ்சாலை அபிவிருத்தியால் மூன்று நாட்களில் முடிக்கலாம் என்று பிரயாண ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர். அத்துடன் வாகனங்களின் தேய்வும் வேறு

கோளாறுகளும் சாலை நல்ல நிலையில் இருப்பதன் காரணமாக குறைந்துள்ளது. அதனால் நேரமும் சிரமமும் செலவும் சேமிக்கப்படுகின்றது.

இத்தகைய மகிழ்ச்சிகரமான முன்னேற்றம் நெடுஞ்சாலைகள் துறையில் வெற்றிகரமாகப் பெற்றிருக்கும் இவ்வேளையில் இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும் வகையில் முதலாவது அதிவேக நெடுஞ்சாலை 2011 நவம்பர் 27ம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் திருக்கரங்களால் மக்கள் உரிமையாக்கப் பட்டது.

கொழும்பிலிருந்து மாத்தறை வரை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த நெடுஞ்சாலைத் திட்டம் கருவறையிலேயே தேங்கிக் கிடந்து அதனை ஜனாதிபதியின் கட்டளையின் பேரில் மீண்டும் உயிர்ப்பித்து (2006ம் ஆண்டு) மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இது 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்களித்தபடி மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதாகவும் அமைகிறது. இரண்டு பாதை வரிசைகள் கொண்டதாக கொழும்பில் இருந்து மாத்தறை வரை நெடுஞ்சாலையை அமைப்பதே ஆரம்பத்திட்டமாக இருந்தது. எனினும் நான்கு பாதைகள் கொண்டதாக இதன் முதலாவது கட்டம் கொழும்பிலிருந்து காலி வரை ஒரு துரித செயற்திட்டமாக இது ஆரம்பிக்கப் பட்டது. இதில் மேலும் இரு பாதை வரிசைகள் சேர்க்கப்படும் வகையில் இக்கட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு கொட்டாவையிலிருந்து காலி பின்னதுவ வரை செல்லும் இலங்கையின் முதலாவது அதிவேக நெடுஞ்சாலையின் தூரம் 92.7 கிலோ மீற்றர்களாகும். இத்தூரத்தைச் சென்றடைய எடுக்கும் நேரம் 55 நிமிடங்களாகும்.

மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் சாரதிக்குச் செல்ல அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இது ஒரு பாதுகாப்பான அதிவேக நெடுஞ்சாலையாக இருப்பதனாலேயே இந்த அளவு வேகத்தில் செல்ல முடிகின்றது. வழமையான பாதையில் கொழும்பிலிருந்து காலிக்குச் செல்ல 3 மணி நேரம் எடுப்பதுடன் ஒப்பிடும் போது பொன்னையொத்த நேரம் எந்த அளவு மிச்சப்படுகிறது என்பது புரியும்.

ஏனைய நெடுஞ்சாலைகளில் கார், முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், பஸ், லொறி, டிரக்டர் மட்டுமன்றி துவிச்சக்கர வண்டிகள், மாட்டு வண்டிகளும் பிரயாணம் செய்கின்றன. அத்துடன் நடந்து செல்லும் பாதசாரிகளும் இப்பாதைகளில் செல்கின்றனர். மேலும் பாதையைக் கடக்கும் போது குறுக்குப் பாதைகள் இடத்துக்கிடம் காணப்படுவதனால் அவற்றின் மூலம் நெடுஞ்சாலைக்கு பல்வேறு வாகனங்கள் எல்லா இடங்களிலும் பிரவேசிக்கின்றன. இதனால் நெடுஞ் சாலைகளில் வாகனம் செலுத்துவது மிகச் சிரமமான காரியமாக உள்ளது. அத்துடன் வேகமாக வாகனம் செலுத்தவும் முடியாது. தொடர்ந்து திரிகையை அழுத்தி (ப்ரேக்) கியர் மாற்றி அடிக்கடி வாகனத்தை நிறுத்திச் செலுத்த வேண்டி இருப்பதால் வாகனத்தில் பல்வேறு உதிரிப் பாகங்கள் தேய்வடையும் வேகமும் துரிதமடைகிறது. அத்துடன் அதிக சக்தி விரயமும் ஏற்படுகின்றது.

புதிய அதிவேக நெடுஞ்சாலையில் சில வகையான வாகனங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டாகும். சைக்கிள், மோட்டார் சைக்கிள், டிரக்டர், முச்சக்கர வண்டி என்பன அவ்வாறு தடை செய்யப்பட்ட வாகனங் களாகும். அத்துடன் இந்த அதிவேக நெடுஞ்சாலையில் நடந்து போவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த நெடுஞ்சாலையில் வாகனங்கள் நுழையக்கூடிய இடங்களும் வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டிருப்பது வெளியிலிருந்து பிரவேசிக்கும் வாகனங்களின் மூலம் வேகமாகச் செல்லும் வாகனங்களுக்குத் தடை ஏற்படாதிருப்பதற்காகும். கொழும்பு காலி அதிவேக நெடுஞ்சாலையில் 8 இடங்களில் மட்டுமே அத்தகைய பிரவேசப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு அவிசாவளை வீதியில் கொட்டாவ, மாக்கும்புர என்பன கொழும்பிலிருந்து அதிவேக நெடுஞ்சாலையின் ஆரம்ப நுழைவிடமாகும்.

அதிலிருந்து 6 கிலோமீற்றர் சென்றவுடன் கஹத்துடுவப் பிரவேசப் பாதை அமைந்துள்ளது. அது கொழும்பு ஹொரணை 120ஆம் இலக்க பஸ் பாதையில் அமைந்துள்ளது. கஹதுடுவையிலிருந்து 7 கிலோமீற்றர் தூரத்தில் கலனிகம பிரவேசப் பாதை பாணந்துறை இரத்தினபுரி வீதியில் அமைந்துள்ளது.

அதனையடுத்து தொடங்கொட பிரவேச வழி அமைந்துள்ளது. இது நாகொடை- மத்துகமை வீதியில் அமைந்துள்ளது. அளுத்கம-ஹொரணைப் பாதையில் வருபவர்கள் அதிவேக நெடுஞ்சாலையில் பிரவேசிக்கும் வகையில் வெலிபன்னவில் ஒரு புகு வழி அமைந்துள்ளது. அதனைத் தொடர்ந்து பத்தேகமையில் ஒரு பிரவேச வழி அமைந்துள்ளது. ஹிக்கடுவ-பத்தேகம பாதையைத் தொடர்புபடுத்தும் விதமாக அது உள்ளது. கடைசிப் பிரவேசப் பாதை பின்னதுவவில் காலி உடுகம பாதையைத் தொடுக்கும் வகையில் அமைந்துள்ளது.

இலங்கையின் நிலப்பரப்பு, பொருளாதார அளவு என்பவற்றை நோக்கும் போது தென்னிலங்கை அதிவேக நெடுஞ்சாலை ஒரு பாரிய செயற்திட்டமாகும். அப்பணிக்குத் தேவையான டொலர் பில்லியன் கணக்கிலான நிதியை இந்நாட்டினால் மட்டும் தாங்கிக் கொள்ள முடியாது. எனவே கட்டாயமாகவே எதிர்கால முதலீடாக வெளிநாட்டு உதவி பெற வேண்டியேற்படுகிறது. கொழும்பு காலி அதிவேக நெடுஞ்சாலை நிறைவடையும் போது 70 பில்லியன் ரூபாய்கள் செலவிடப் பட்டுள்ளன.

கொட்டாவ மாக்கும்புறையிலிருந்து தொடங்கொட வரையிலான 34 கிலோ மீற்றர் தூரத்தை அமைக்க ரூபா 20 பில்லியன் செலவேற்பட்டது. அதன் நிர்மாணப் பணிகள் சீனாவின் சைனா ஹாபர் கோபரேஷன் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. அதற்கான பொறியியல் ஆலோசனை சேவையை ஜப்பான் நாட்டின் ஒரியன்டல் பொறியியல் கம்பனி வழங்கியது. அதற்கான கடனுதவி ஜப்பான் ஒத்துழைப்பு நிதியத்திலிருந்து வழங்கப்பட்டது.

தொடங்கொடவிலிருந்து குருந்துகஹஹதக்ம வரையிலான 32 கிலோ மீற்றர் தூரத்தை ஜப்பானின் தாய்ஷி கோபரேஷன் என்ற நிறுவனம் நிர்மாணித்தது. அதன் செலவுத் தொகையான ரூபா 15.4 பில்லியனை அதே நிறுவனம் கடனாக வழங்கியது.

குருந்துகஹஹதக்ம முதல் பின்னதுவ வரையிலான 30 கிலோ மீற்றர் தூரத்தின் நிர்மாணப் பணிகள் 2003 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டன. ஜப்பானின் குமாகாய் குமீ நிறுவனம் அதன் நிர்மாணப் பணிகளை நடத்தியதுடன் இங்கிலாந்தின் ரவுன்டன் கம்பனி அதற்கான பொறியியல் ஆலோசனை சேவையை வழங்கியது. இதற்கான செலவுத் தொகை ரூபா 24.1 பில்லியனை ஆசிய அபிவிருத்தி வங்கி கடனாக வழங்கியது.

இவ்வதிவேக நெடுஞ்சாலை 48 பிரவேசச் சுரங்க வழிகளையும் 12 மேம்பாலங்களையும் 18 பிரதான பாலங்களையும் உள்ளடக்கியது. இலங்கையின் அதி நீளமானதும் பெரியதுமான பாலமும் இந்த அதிவேக நெடுஞ் சாலையிலேயே அமைந்துள்ளது. அது மேற்கு தெற்கு மாகாணங்களை இணைக்கும்



வகையில் பெந்தொட்டையில் இந்தப் பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது 780 மீற்றர் நீளமும் 18 மீற்றர் அகலமும் கொண்டது. இப்பாலம் அமைப்பதற்காக ரூபா 1090 மில்லியன் செலவிடப்பட்டது. கொட்டாவையிலிருந்து குருந்துகஹஹதக்ம வரையிலான பகுதியில் 5 பிரதான பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. களுகங்கைக்குக் குறுக்காக 150 மீற்றர் நீளமான ஒரு பாலமும் வெலிபன்னையில் 120 மீற்றர் நீளமான பாலமும் அமைக்கப் பட்டுள்ளன.

புதிய அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிக்கும் போது உடைக்கப்பட்ட வீடுகள், வீதிகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிகள் ஏராளம். பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த வீடுகள், காணி பூமிகளை விட்டு வேறு இடங்களுக்குச் செல்வதென்பது யாருக்கும் ஒரு வேதனையான அனுபவமாகும்.

எவ்வாறாயினும் நாட்டின் பொது நன்மை கருதி சிலர் விரும்பியே வெளியேறியதுடன் அவர்களுக்கு ஏனையவர்களை விட அதிக கவனிப்பும் வழங்கப்பட்டது. வீடுகளில் இருந்து வெளியேறிய குடும்பங்களின் எண்ணிக்கை 1300 ஆக இருந்ததுடன் அவர்களுக்கு திருப்தியான நட்டஈடும் வழங்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் புள்ளி விபரங்களின் படி 6000 பேருக்கு உரித்தான 2700 ஏக்கர் நிலத்தின் 10300 நிலத்துண்டுகள் அதிவேக நெடுஞ்சாலைக்காக சுவீகரிக்கப் பட்டுள்ளது. இதற்காக அரசாங்கம் வழங்கிய நட்டஈட்டுத் தொகை 42 பில்லியன் ரூபாய் களாகும்.

தம் வீடுகள் சொத்துக்களை அதிவேக நெடுஞ்சாலைக்காகச் சுவீகரிப்பதற்கு எதிராக அப்போது பாரிய எதிர்ப்புகளும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன. அவற்றிற்கு பல அரசியல் பிரிவினரும் உரமூட்டினார்கள் என்பதையும் காணக் கூடியதாக இருந்தது.

இந்த எதிர்ப்புக்கான பிரதான காரணமாக அமைந்தது நட்ட ஈடு செலுத்துவதற்கான அரசாங்க மதிப்பீடு மிகக்குறைவு என்ற கருத்து நீண்ட காலமாக நிலவி வந்தமையாகும்.





ஆயினும் இந்த அதிவேகப் பாதைக்கான நட்டஈட்டின் போது அதிஉச்ச நியாயம் வழங்கப்பட்டது. மாற்று நிலமும் நட்ட ஈடும் என்ற இரண்டும் அனேக நிலச்சொந்தக்காரர் களுக்கு வழங்கப்பட்டது. இது அவர்களின் விருப்பத்தின் பேரிலாகும். நட்டஈடு மட்டும் பெற விரும்பியவர்களுக்கு அவ்வாறு வழங்கப்பட்டது.

நட்டஈட்டுத் தொகையைக் கணிப்பிடுவதற்காக ஒரு விஷேட குழு நியமிக்கப்பட்டதுடன் அது "நிலச்சுவீகரிப்புக் குடியேற்றக் குழு" என்றழைக்கப்பட்டது. 21 பிரதேச சபைப் பிரதேசங்களினூடாக அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்படுவதால் மேற்படி குழு பிரதேச செயலாளர்கள் தலைமையில் நடைமுறைப் படுத்தப்பட்டது. காணிகள், வீடுகளை இழக்க நேரிட்டவர்கள் குழுவின் முன் அழைக்கப்பட்டு அவர்களிடமிருந்து சுவீகரிக்கப்படும் சொத்துக்கள் அதற்கான நட்டஈடு என்பன பற்றிக் கலந்துரையாடப்பட்டது. வழங்கப்படும் நட்டஈட்டுத் தொகை குறித்து அவர்களுக்குத் திருப்தியில்லையேல் மேன்முறையீடு செய்வதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டது. அத்துடன் தத்தம் காணி, சொத்துக்களுக்கு அரசாங்கக் கணிப்பில் நட்டஈட்டுக்குப் பதிலாக தத்தமது கணிப்பீட்டை முன் வைக்கவும் இடமளிக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இதன் பெறுபேறாக அரச மதிப்பீட்டை விட 1.65 மில்லியன் ரூபாய்கள் மேலதிக நட்டஈடாக வழங்க வேண்டி யேற்பட்டது.

இங்கு நட்டஈடு வழங்குவதில் காணப்பட்ட சிறப்பம்சம் யாதெனில் காணி உரிமையாளருக்கு மட்டுமன்றி வீட்டில் வாடகைக்கிருப்போருக்கும், உரிமைகளை நிலை நாட்ட முடியாத நிலையில் குடியிருப்போருக்குக் கூட நியாயமான நட்டஈட்டுத் தொகை வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட நட்டஈடு எந்தளவு திருப்தியாக அமைந்ததெனின் தங்களது ஒரு சிறு காணித்துண்டாவது சுவீகரிக்கப்படாதவர்கள் பாரிய நட்டஈட்டுத் தொகை கிடைக்க வில்லையே என்று கவலைப்படும் நிலை காணப்பட்டது.

புதிய அதிவேக நெடுஞ்சாலையினால் இரு பிரதான நன்மைகள் கிடைக்கின்றன. அவை பொருளாதார அபிவிருத்தியும் வறுமை ஒழிப்புமாகும். அதிவேக நெடுஞ்சாலையின் செல்வாக்குக்கு உட்படும் பிரதேசங்களாக இருப்பது களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களாகும். நாட்டின் குடித்தொகையில் 18% ஆன மூன்று மில்லியன் மக்கள் இப்பிரதேசங்களில் வாழ்கின்றனர். அவர்களுள் 30% ஆனோர் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களாக கருதப்படுகின்றனர்.

அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்பட்ட பின்னர் விநியோகப் பிரிவினருக்கும் சந்தைக்குமான இலகுவான போக்குவரத்துச் சேவை வழங்கப்படுகிறது. அது தனியார் துறை முதலீட்டுக்கும் தொழில் வாய்ப்புகளுக்குமான ஒரு ஊக்குவிப்பாக அமையும். நெடுஞ்சாலையை அண்மித்ததாக உள்ள வேலையின்மையும் வறுமையும் உச்ச மட்டத்தில் காணப்படும் ஒரு நிலையில் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி புதிய

பொருளாதாரச் செயற்பாடுகள் இப் பிரதேசங்களை அடையும் என எதிர்பார்க்கப் படுகிறது. மீன்பிடி, மீன் வளர்ப்பு, விவசாயம், உல்லாசப் பிரயாணம் உட்பட விரிவானதும் நல்ல விலை கிடைப்பதுமான சந்தைகளும் போக்குவரத்து முன்னேற்றம் வசதி காரணமாக கூடிய இலாபம் ஈட்டும் துறைகளாக மாறும்.


இப்பாதையைப் பயன்படுத்துவோரிடம் கட்டணம் அறவிடப்படும். இந்த அதிவேக நெடுஞ்சாலை ஏனைய நாட்டு மக்களுக்கு சாதாரண ஒரு விடயமாயினும் இலங்கை மக்களுக்கு ஒரு புதிய அனுபவமாகும்.

வாகன வகைகள் நான்கின் கீழ் அறவிடப்படும். முதலாம் வகை வாகனங்களான கார், வேன், ஜீப் வண்டிகளுக்கு கொட்டாவையிலிருந்து பின்னதுவ வரை (காலி) வரையிலான டோலர் கட்டணம் (அறவிடப்படும் தொகை) ரூபா 400 ஆகும் இரண்டாவது வகை வாகனங்களான பஸ், லொறி வண்டிகளுக்கு கட்டணம் 700 ரூபாவாகும். மூன்றாவது வகை வாகனங்களான 10 சில்லுகள் வரையிலான கனரக வாகனங்களுக்கான கட்டணம் ரூபா 1500உம் நான்காவது வகையான 10 சில்லுகளுள்ள கனரக வாகனங்களுக்கு கட்டணம் 2000 ரூபாவாகும்.

நிபுணர்கள் கூறியுள்ளவாறு கொழும்பிலிருந்து காலிக்கு வழமையான கொழும்பு-காலி வீதியில் செலவாகும் பெற்றோலியத்தின் செலவு அதிவேக நெடுஞ்சாலையில் 50% ஆகக் குறைவடைகின்றமையால் போக்கு வரத்துச் செலவு மீதமாகின்றது.

இந்நெடுஞ்சாலையில் உட்பிரவேசிக்கும் வாகனங்கள் மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அது மட்டுமன்றி சில்லுகள் (டயர்), நிரப்பும் காற்றின் அளவு, இயந்திரத்தின் செயற்பாடு, நிறுத்துகை(பிரேக்), விளக்குகள் என்பன முறையாக இயங்கும் நிலையில் இருக்க வேண்டும். இப்பாதையில் வாகனம் செலுத்த முடியுமான ஆகக்கூடிய வேகம் மணிக்கு 100 கிலோமீற்றர்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இடது பக்கப் பாதையில் வாகனம் செலுத்தப்பட வேண்டும். வலது பக்கப்பாதை வாகனத்தை முந்திச் செல்வதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

இந்நெடுஞ்சாலையில் கடமையாற்றுவதற்காக 500 பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு விஷேட பயிற்சியும் வழங்கப்பட்டது. தினமும் 24 மணி நேரமும் 9 மோட்டார் வாகனங்களும் 9 மோட்டார் சைக்கிள்களும் 6 அம்புலன்ஸ் வண்டிகளும் 2 பொலிஸ் வாகனங்களும் 3 பவுஸர்களும் 3 தீயணைப்பு வண்டிகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. தவறு செய்பவர்களை உடனடியாகவே இனங்கண்டு கொள்ள இதன்



மூலம் முடியும். சிரேஷ்ட வீதி முகாமைத்துவ உதவிப் பொலிஸ் பரீட்சகர் ஒருவரின் கீழ் வாகன வசதிகளுடன் கூடிய பொலிஸ் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் சோதனை வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

பொலிஸ் அதிகாரிகளுக்கு மேலதிகமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 500 பேர்களும் வீதியின் அத்தியாவசிய சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஒரு வாகனம் பழுதடைந்தால் அல்லது விபத்துக்குள்ளானால் உடனே அந்த வாகனத்தை அப்புறப்படுத்தி நிறுத்தி வைக்கவும் நெடுஞ்சாலையின் இரு பக்கங்களிலும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திடீர் அனர்த்தமொன்றின் போது உடன் உதவி பெறுவதற்காக தொலைபேசி எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. அவை 24 மணி நேரமும் இயங்குவதுடன் எந்தவொரு தொலைபேசியிலிருந்தும் அவற்றுக்கு அழைப்பு விடுக்கலாம். 1969 என்பதே தொலைபேசி இலக்கமாகும்.

கொட்டாவையிலிருந்து 44 கிலோமீற்றர் தொலைவில் அதிவேக நெடுஞ்சாலையின் ஒரே சேவை வலயம் அமைந்துள்ளது. அங்கு ஒரு உணவகமும், பெற்றோல் நிரப்பும் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. அதிவேக நெடுஞ்சாலை பற்றிய இலங்கையின் கனவு 2011 நவம்பர் 27ஆம் திகதி நனவாகியதுடன் இலங்கையின் மொத்த வீதிகளையுமே நவீனமயமாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இப்போது பல அதிவேக நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

28 கிலோமீற்றர் நீளமான கொழும்பு-கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையும் 90 கிலோமீற்றர் நீளமான கொழும்பு-கண்டி அதிவேக நெடுஞ்சாலையும் இப்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவை நிறைவு பெற்றவுடன் கொழும்பின் வாகன நெரிசலில் சிக்கிக் கொள்ளாது காலி, மாத்தறை வாசிகள் கட்டுநாயக்கவுக்கும் கண்டிக்கும் பயணம் செய்யும் வாய்ப்புக் கிடைக்கும்.

கீழ்க்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி என்பது ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் அத்தியவசியாமான ஒரு காரணியாகும். அதிவேக நெடுஞ்சாலைகள் அவற்றிலொரு பிரதான தேவையாகும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையிலான இன்றைய இலங்கை அரசாங்கம் எதிர்காலம் பற்றிய தூரப் பார்வையுடன் அந்தப் பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.





# கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பில் நவீன தொழில்நுட்பப் பாடவிதானம்

எமது நாட்டில் திறமையான பிள்ளைகள், திறமையற்ற பிள்ளைகள் என்று இரண்டு இனங்களில்லை. நாட்டிற்கு மிகவும் அவசியமானதும் நாட்டிற்குச் சேவை செய்யக்கூடியதுமான எமது பிள்ளைகள் இந்த நாட்டின் இளைய சந்ததியினர் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பில் நவீன தொழில்நுட்பப் பாடவிதானத்தைப் புதிதாக அறிமுகப்படுத்தும் விசேட நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது. வடக்கு-கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியிலிருந்து பெருமளவு மாணவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி தொடர்ந்தும் உரையாற்றுகையில்-

அனைத்து பிள்ளைகளும் இந்த நாட்டிற்காக பிறந்தவர்கள். அவர்களோடு இணைந்து அனைவரும் இந்த நாட்டைக் கட்டியெழுப்புவோம்.

உலகெங்கிலும் சென்று நாம் இலங்கையர் என்று கூறி பெருமைப்படும் அளவில் இலங்கை உன்னதமான நாடாக கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இது ஒரு தோல்வியான நாடு என எப்போதும் சர்வதேசத்திற்குக் காட்ட விளையும் தரப்பினருக்கு நாம் பெற்றுக்கொண்ட வெற்றிகள் பதிலாக அமையும்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் தொழில்நுட்பப் பாடவிதானத்தை அறிமுகப்படுத்தியுள்ளமை சர்வதேசத்தின் பாராட்டுக்கு இலக்காகியுள்ளது. இதனை கடந்த 20 வருடங்களுக்கு முன்னரே நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும் என கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்ததை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தற்போது இந்த செயற்பாட்டை நடைமுறைப்படுத்த அர்ப்பணிப்புடன் ஈடுபட்டவர்கள் உண்மையில் பாராட்டுக்குரியவர்கள்.

உயர்தரத்தோடு தொழில்நுட்பப் பாடத்தை அறிமுகப்படுத்துவது முழு நாடும் மகிழ்ச்சிப்படக்கூடிய விடயமாகும். குறிப்பாக மாணவர்கள் பெருமகிழ்ச்சியுறும் நாள் இதுவாகும்.

2006 ஆம் ஆண்டில் நான் நாட்டுக்கு ஒரு வாக்குறுதியை அளித்தேன். அன்று நாம் முகங்கொடுத்த சவால்கள் மற்றும் நெருக்கடிகளை எதிர்கால எமது சந்ததிக்கு விட்டு வைக்கப்போவதில்லை என்று. அதை நான் நிறைவேற்றியுள்ளேன். எமது உயிரைப் பணயம் வைத்து பாரிய அர்ப்பணிப்புடன் அதற்காக நாம் செயற்பட்டுள்ளோம்.

தற்போது வருடாந்தம் மூன்று இலட்சம் பிள்ளைகள் பாடசாலைகளில் சேர்க்கப்படுகிறார்கள். இவர்கள் உயர்தரம் வரை கற்றபின் 26000 பேரே பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படுகின்றனர். உயர் தரத்திற்குப் பின் சுமார் மூன்று இலட்சம் பிள்ளைகள் கைவிடப்பட்டவர்களாக உள்ளனர். இவர்கள் சித்தி பெறாதவர்களாகவும் திறமையற்றவர்களாகவும் கணிக்கப்படுகின்றனர்.

உயர்தரத்தில் சித்தி பெறத் தவறினால் அரசியல்வாதி ஒருவரின் ஆதரவு இல்லாமல் தொழில் வாய்ப்புப் பெற முடியாது என்ற நிலையே ஒரு காலத்தில் காணப்பட்டது.



வரலாற்றில் தொடர்ந்து இந்த பிரச்சினைக்கே நாம் தீர்வு காண விளைகின்றோம். இது நீண்ட காலம் இந்த நாட்டில் இருந்து வந்த பிரச்சினையாகும். தமிழ்- சிங்களம்- முஸ்லிம் என்று பார்க்க முடியாது. அனைத்து மாணவர்களும் எதிர்நோக்கிய பிரச்சினை இது.

இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நான் 1994 இல் ஒரு அமைச்சராக முதலில் நாடெங்கிலும் தொழிற் பயிற்சி நிலையங்களை நிறுவ நடவடிக்கை எடுத்தேன். நாம் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்திற்கு தொழில் நவீன சட்டத்தை இணைப்பது இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கே. கல்வியமைச்சு- உயர் கல்வியமைச்சு மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு ஆகியன இணைந்து முன்னெடுத்துள்ள இந்த நடவடிக்கை பாராட்டுக்குரியது.

நாம் பாடசாலைகளில் தொழில்நுட்பம் கற்கும் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் சிறந்த வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளோம். அவர்களுக்காக ஹோமாகமயில் 53 ஏக்கரில் நெனோ டெக்னோ லோஜி பூங்கா ஒன்றை நிர்மாணித்து வருகிறோம். பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்ப பீடங்களை புதிதாக ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இது தொடர்பில் சகல உபவேந்தர்களினதும் இணக்கப்பாட்டைப் பெற்றுள்ளோம். இம்முறை ரத்மலானை தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு 370 பேரை அனுமதித்துள்ளோம். ஏனைய பல்கலைக்கழகங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி தொழில்நுட்பப் பட்டத்திற்காக மேலும் 1000 பேரை இணைத்துக்கொள்ள்வும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கென 2016 இல் சகல மாவட்டங்களிலும் தலா ஒன்று என்ற ரீதியில் 25 பல்கலைக்கழகங்களை நிறுவவுள்ளோம். 7500 பேரை அவற்றுக்கு சேர்க்கவுள்ளோம்.கல்விக் கல்லூரிகளில் வருடாந்தம் 200 பேரை இணைத்துக்கொள்ளவுள்ளோம்.

இதற்கிணங்க 2016 இல் கணிதம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான மாணவர்களை 40 வீதமாகவும் வணிக மாணவர்களை 35 வீதமாகவும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்கான நிதியை செலவிடவும் நாம் பின்னிற்கப் போவதில்லை எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அமைச்சர்கள் பந்துல குணவர்தன, எஸ்.பி. திசாநாயக்க, துமிந்த திசாநாயக்க, ஜோன் செனவிரத்ன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கல்வித்துறை மேற்பார்வை பாராளுமன்ற உறுப்பினர் மொஹான் லால் கிரேரு ஆகியோர் உட்பட துறை சார்ந்த முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# புனரமைக்கப்பட்ட கீரிமலை புராதன மண்டபம்!





சுமார் இருபது வருடங்களுக்கும் மேலாக உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தடைசெய்யப்பட்டிருந்த கீரிமலை மற்றும் அதனையடுத்துள்ள சில பகுதிகளுக்கு இப்போது செல்லக்கூடியதாகவுள்ளது. போரினால் சேதமடைந்திருந்த கீரிமலை கேணி உட்பட அதனையடுத்துள்ள பகுதிகள் வலி வடக்கு பிரதேச சபையால் புனரமைக்கப்பட்டுள்ளது.

அந்தியேட்டிக் கிரியைகளைச் செய்பவர் களுக்காக மடம் ஒன்றும் கடற்கரையோரமாக அமைக்கப்பட்டுள்ளது. அந்தியேட்டி செய்வதற்காக பலரும் இப்போது கீரிமலைக்கு வரத் தொடங்கியுள்ளார்கள். அவர்களுக்காக வலி வடக்கு பிரதேச சபை செய்துகொடுத்துள்ள வசதிகள் வரவேற்கத்தக்கது.

இதனைவிட கீரிமலை பழைய மடம் போரினால் இடிந்த நிலையில் ஒரு புராதன மண்டபம் போலக் காணப்படுகின்றது. அதனையும் இங்கேயுள்ள படங்களில் காணலாம்.


தகவல்: ஈஸ்வரலிங்கம்

# மாணவர்களுக்கு பாலூட்டும் ஜனாதிபதி





"சரியான போசாக்கு நிறைந்த தேசம் ஆரோக்கியமான சுறுசுறுப்பான இளைஞர் பரம்பரை" என்ற தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்கான பசும்பால் விநியோக வைபவத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.



## இலங்கையின் நிரந்தர பிரதிநிதியும் இலங்கை பிரதிநிதிகள் குழுவிற்கு தலைமை தாங்குபவருமான

# ரவிநாத் ஆரியசிங்க

*2013 மே மாதம் 27 ந் திகதி*

*மனித உரிமை சபையின்*

*23வது அமர்வில் ஆற்றிய உரை*

UNITED NATIONS
HUMAN RIGHTS

எனது குழு உயர் ஸ்தானிகரின் அறிக்கையை கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளதுடன் அவரது ஜீ.ஏ 48/141 யோசனைக்கு ஆதரவு வழங்கும்.

மனித உரிமை ஆணையாளர் சபையின் காரியாலயமானது பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான அதனது முயற்சியில் நிதி மற்றும் மனித வளங்கள் சரியாக பங்கிடப்படவில்லை.

சகல நாடுகளும் வித்தியாசமின்றி பாதுகாக்கப்படல் வேண்டும். அத்துடன் சமமான முறையில் எல்லா நாடுகளுக்கும் நிதி மற்றும் மனிதவளங்கள் பங்கிடப்படல் வேண்டும் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மனித உரிமை ஆணையாளர் சபையின் காரியாலயம் வரவு செலவு திட்டத்தில் முகங்கொடுத்துவரும் சவால்களை இலங்கை நன்கு கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளது.

மனித உரிமை ஆணையாளர் சபையின் காரியாலயத்தின் நிதி சுதந்திரமின்மையை இலங்கை கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளதுடன் குறிப்பிட்ட சில நாடுகளின் மனித உரிமை மீறல்களை மாத்திரம் கவனத்தில் எடுத்துக் கொள்வதும் சில நாடுகளுக்கு விகிதாசாரமுறையில் நிதி பங்கிடப் படாமையும் மனித உரிமைகளை முறையான விதத்தில் பேணுவதற்கான வசதிகள் சில நாடுகளுக்கு இல்லை என்றே குறிப்பிடவேண்டும்.

இலங்கை விடயத்தில் சபையானது அதிக நெருக்குதலை வழங்கி வருவதை இங்கு வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியுள்ளது. எல்ரீரீஈ பயங்கரவாதத்தை தோற்கடித்து நாட்டை ஒற்றுமைப்படுத்தி 4 ஆண்டுகள் பூர்த்தியாகியும் இன்னும் அது சம்பந்த மாக சர்வதேச விசாரணைகள் நடாத்தப்படவேண்டுமென்பது கவலை அளிக்கும் விடயமாகும். புலம்பெயர் தமிழர்களின் அரசியல் நோக்கத்துடன் கூடிய நெருக்குதலின் காரணமாக இச் சபையானது இலங்கை மேல் தொடர்ந்தும் விசாரணைகள் என்ற பெயரில் அச்சுறுத்தி வருகிறது.

பயங்கரவாதத்தை தோற்கடித்து நான்கு வருடங்களில் பாரிய முன்னேற்றத்தை இலங்கை கண்டுள்ளதென்பதை மறுக்க முடியாது. தொடர்ந்தும் சபையுடன் இணைந்து செயற்படுவதென்ற இலங்கையின் நிலைப்பாட்டிற்கு இணங்க



2013ல் சபை கூடியதன் பின் பாரிய முன்னேற்றத்தை கண்டுள்ளதென்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இலங்கையின் சொந்த சமரச பொறிமுறையான கற்றுக் கொண்டபாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுக்கிணங்க இலங்கை அரசாங்கமானது 2013 ஜனவரி, பெப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் தேசிய செயற்திட்டத்தை 22 முக்கிய முகவர்கள் மூலம் அமுல்படுத்தியுள்ளது.

இறுதிக்கட்ட மீள்குடியேற்றம் 2013 செப்டம்பரில் முல்லைத்தீவில் இடம் பெற்றதுடன் அதில் 23,398 பேர் உறவினருடன் வாழ விரும்பினர். போர் முடிவுக்கு கொண்டுவந்தவுடன் இடம்பெயர்ந்தவர்களின் தொகையானது 295,873 ஆகும் அவர்கள் அனைவரும் வெற்றிகரமாக குடியேற்றப்பட்டு விட்டனர்.

2013 மார்ச் இறுதியளவில் 96 சதுர கிலோ மீற்றர் மாத்திரம் கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இருந்தது. 961,447 க்கு மேற்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 75 வீதமானவை இலங்கை இராணுவத்தினரால் அகற்றப்பட்டவையாகும்.

ஏறக்குறைய கைப்பற்றப்பட்ட மற்றும் சரணடைந்த எல்ரீரீஈ போராளிகள் 12,000 பேரில் 15 மே மாதமளவில் 11,551 பேர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டதுடன் அவர்களுள் 594 சிறுவர்களும் அடங்குவர். இன்னும் 374 போராளிகள் 18 பெண்உறுப்பினர்கள் உள்ளடங்கலாக புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றனர். புனர்வாழ்வளிக்கப்பட்ட 212 இளைஞர் யுவதிகள் பல்கலைக்கழக அனுமதிபெற்று தமது கல்வியை தொடருகின்றார்கள்.

194 முன்னைய போராளிகளுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு வவுனியா மன்னார் மற்றும் அநுராதபுரத்தில் மேலதிக நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு விசாரணை நடாத்தப்படுகிறது. அதிகமாக அவர்களுக்கு புனர் வாழ்வளித்து விடுதலை செய்யவே உத்தேசிக்கப்பட்டுள்ளது.



எல்ரீரீஈ சந்தேக நபர்களின் உறவினர்களுக்கு அவர்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பயங்கரவாத தடுப்பு பிரிவு அவர்கள் பற்றிய தகவல்களை கணினியில் பதிந்துள்ளதுடன் அவர்களைப் பற்றிய தகவல்களை 24 மணித்தியாலங்களும் பெறக்கூடிய விதத்தில் கொழும்பு, வவுனியா, மற்றும் பூசா போன்ற இடங்களில் வழிவகைகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.



அவர்களை சிறைச்சாலையிலும் தடுப்பு முகாங்களிலும் பார்வையிட சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் காணாமல் போனவர்கள் சம்பந்தமாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து கலந்துரையாடி வருகிறது. 2564 பேர்கள் பற்றிய தகவல்கள் இல்லை. அவர்களில் 676 சிறுவர்களும் 1888



வயதுவந்தவர்களும் அடங்குவர். இதனை தேடுதல் மற்றும் ஒன்றுசேர்த்தல் பிரிவு வெளியிட்டுள்ளது.

குடிசன மற்றும் புள்ளிவிபர திணைக்களம் வெளியிட்ட தகவலின்படி 2009 ஜனவரி 1 தொடக்கம் 2009 மே 31 வரையான காலப்பகுதியில் 8998 பேர் இறந்துள்ளனர். அவர்களுள் முதுமை, சுகயீனம் இயற்கை மரணம். விபத்து மரணம், கொலை தற்கொலை மற்றும் ஏனைய காரணங்களும் அடங்கும். இவற்றுள் 7896 பேர் யுத்தத்தில் இறந்திருக்கக் கூடும். அவர்களுள் எல்ரீரீஈ போராளிகளும் தப்பியோடிய பொதுமக்களும் அடங்குவர். சிலர் இலங்கையில் வேறு இடங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளனர். ஜனவரி முதல் மே 2009 வரை 2,400 பாதுகாப்பு படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 11,000 பேர் காயமடைந்துள்ளனர். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுக்கு இணங்க இறந்தவர்கள் காணாமல் போனவர்கள் சம்பந்தமாக புதிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள மேலும் ஒரு ஆய்வை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் மூலம் பலகேள்விகளுக்கு விடை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருகோணமலையில் கொல்லப்பட்ட 5 மாணவர்கள் சம்பந்தமாக சட்டமாஅதிபர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க பொலிசார் தங்கள் விசாரணைகளை முடித்துள்ளதுடன் அவர்களது அறிக்கை திருகோணமலை மாவட்ட நீதவானுக்கு வழங்கப்படும். 17 ஏசிஎவ் தொண்டர்கள் கொல்லப்பட்டது சம்பந்தமாக தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இராணுவ நீதிமன்றம் அலைவரிசை 4 காணொளிகள் பற்றி விசாரணை நடாத்தி வருகிறதுடன் இலங்கை அரசாங்கம் அலைவரிசை 4 இடம் அதற்கான ஆதாரங்களை சமர்ப்பித்து விசாரணை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுள்ளது.

உச்சகட்ட யுத்த நடவடிக்கையின்போது குடாநாட்டிலும் தீவுப்பகுதிகளிலும் 50,000 ஆக இருந்த பாதுகாப்பு பிரிவினர் தற்போது 13.200 ஆக குறைக்கப்பட்டதுடன் அவர்கள் இலங்கையின் பாதுகாப்பு காரணங்களுக்காக அங்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு பிரிவினரை அரச காணிகளில் நிறுத்தி மக்களுக்கு தங்கள் சொந்த இடங்களில் மீள குடியேற வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேலும் பலாலி விமானத்தளம் மற்றும் காங்கேசன்துறை துறைமுக விஸ்தரிப்புக்காக சில காணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 3 தசாப்த யுத்தத்தின் பின் அபிவிருத்தி நடவடிக்கை

களுக்காக தனியார் காணிகளை பொறுப்பேற்றாலும் அவர்களுக்கு சந்தை விலைக்கு நஷ்டஈடுகள் வழங்கப் படுவதுடன் மாற்றுக் காணிகளும் அண்மித்த இடங்களில் வழங்கப்படும்.

2013 மே மாதம் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுக்கு இணங்க காணி ஆணையாளர் நாயக திணைக்களம் வடக்கு கிழக்கு பகுதிகளில் மாகாண காணி ஆணையாளர்கள், அரச அதிபர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களுடன் இணைந்து காணிப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் துரித செயற்திட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

இது சம்பந்தமாக மூன்று மொழிகளிலும் பொது மக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின் பின் வடபகுதியின் பொருளாதார வளர்ச்சி 2010ல் 22 வீதத்தாலும் 2011 ல் 27.1 வீதத்தாலும் உயர்வடைந்துள்ளது. 2012க்கான இதேகாலத்தைய வளர்ச்சி வீதம் வெளியிடப்படும். 2012ல் வடக்கில் நெற்பயிர்ச்செய்கை 24 வீதமாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மீன்பிடித் துறையிலும் வடக்கில் அதிக முன்னேற்றம் காணப்பட்டுள்ளதுடன் அது 28 வீதமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் அரசாங்கம் தொடர்ந்து உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொண்டு வருகிறது. பாதைகள் புனரமைத்தல், மின்சக்தி உற்பத்தி, பாடசாலைகள் புனரமைத்தல், புகையிரத, பாதைகள் அமைத்தல் போன்றவற்றை மேற்கொண்டு வருகிறது.


வடமாகாணத்தில் குடிசன மதிப்பீடு முடிவடைந்ததால் செப்டம்பர் 2013ல் வட மாகாண சபைத் தேர்தலை நடாத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இந்த சபையானது மேலும் அறிந்து கொள்ளும் வகையில் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் 2013

## யுத்தத்தின் பின் வடபகுதியின் பொருளாதார வளர்ச்சி 2010ல் 22 வீதத்தாலும் 2011 ல் 27.1 வீதத்தாலும் உயர்வடைந்துள்ளது.

ஆகஸ்ட் 25-31 வரையான காலப்பகுதியில் 2011ல் அவருக்கு வேண்டுகோளுக்கு இணங்க இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார். அதன்போது அவர் இலங்கை நிலைமை சம்பந்தமாக நேரடியாக காணமுடிவதுடன் 30 வருட யுத்தத்தின் பின் அதுகண்டுள்ள வளர்ச்சி சம்பந்தமாகவும் கவனத்திற் கொள்ளலாம். ஆகவே இந்த விஜயத்தின் மூலம் இலங்கைக்கும் மனித உரிமை ஆணையாளர் காரியாலயத்துக்கும் இடையே நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி இணைந்து செயற்பட முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை 23வது சபை அமர்வு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுக்கு இணங்க, ஆக்கபூர்வமான ஈடுபாட்டை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளது.







# துப்பாக்கியை ஏந்திய கரங்கள்



# துடுப்பேந்தும் கைகளாக...



– அஸ்மீனா

வடக்கின் வசந்தம் உதயமாகியதைத் தொடர்ந்து வட பகுதியில் விளையாட்டுத் துறையிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

உலகிலேயே பெரும் எண்ணிக்கையான ரசிகர்களை கவர்ந்த விளையாட்டாக கிரிக்கெட் திகழ்கிறது.

டெஸ்ட் போட்டி, 50 ஓவர் போட்டி, 20 ஓவர் போட்டி, என பல்வகை போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதால் கிரிக்கெட் போட்டி நடைபெறும் நாடுகளின் விளையாட்டு மைதானங்கள் எல்லாம் கிரிக்கெட் ரசிகர்களினால் நிரம்பி வழிகின்றன.

கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் உலகிலேயே அதிகமான விக்கெட்டுக்களை கைப்பற்றிய வீரர் நம் நாட்டைச் சேர்ந்த ஒரு தமிழ் மகன் என்பதில் எமக்கெல்லாம் மகிழ்ச்சியே. அவர்தான் யாவரும் அறிந்த முத்தையா முரளீதரன்.இவர் 800 விக்கட்டுக்களை கைப்பற்றி சாதனை படைத்தவர்.

கடந்த 30 வருட காலமாக போர் முகில் நாட்டை கவ்வியிருந்ததினால் முரளீதரன் மட்டுமே ஒரு தமிழ் மகனாக இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி வந்தார். தற்சமயம் அவர் டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். இந்த வெற்றிடத்தை நிரப்ப வடக்கிலிருந்தும் இளைஞர்கள்

விளையாட்டில் சிறப்புற வேண்டும் அவர்கள் எமது நாட்டுக்கு புகழ் தேடித் தர வேண்டும். என்று ஓயாது சொல்லி வந்த நம்நாட்டுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, யாழ் மாணவர்களை தேசிய கிரிக்கெட் அணியில் சேர்த்துக் கொள்வதற்கு பணிப்புரை விடுத்தார்.

இதன் பயனாக இன்று யாழ் மாணவர்கள் ஐவர் தேசிய கிரிக்கெட் அணியில் உள்வாங்கப்பட்டுள்ளனர். இது விளையாட்டுத் துறையில் வட பகுதி மக்களுக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும்.

கொக்குவில் இந்து வித்தியாலயத்தைச் சேர்ந்த கமல யோகேஸ்வரன் சுலோகன் , மஹஜன கல்லூரியின் ஜயபாலசிங்கம் ஜனஜன் ,கே.கதிஜீபன் மற்றும் மன்னார் பாத்திமா கல்லூரி எம் பெரேரா ,மன்னார் சென் .சேவியஸ் கல்லூரி இமேனுவேல் ரெக்ஷன் ஆகியோரே தேசிய கிரிக்கெட் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட வட பகுதி மாணவர்களாவர்.

இலங்கையின் வேகப் பந்து வீச்சாளர்களான சமிந்த வாஸ், ரவீந்திர புஷ்ப குமார ஆகிய இரு தேசிய வீரர்களே இந்த வட பகுதி மாணவர் ஐவரையும் கொழும்பில் பயிற்சிப் பாசறைக்காக தெரிவு செய்தவர்களாவர்.

மற்றுமோர் டெஸ்ட் வீரரான சம்பிக ராமநாயக்காவின் நேரடி கண்காணிப்பின் கீழ் இந்த யாழ் மாணவர்கள் தற்சமயம் கடுமையான கிரிக்கெட் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

துப்பாக்கியை ஏந்திய கரங்கள் .இன்று துடுப் பேந்தும் கைகளாக பெரும் புரட்சிகரமான மாற்றத்தை இன்று நாம் கண்டு வருகிறோம்.

எனவே ஆயிரமல்ல இலட்சக்கணக்கான கரங்கள் தட்டட்டும் ! ஜெய கோஷம் எழுப்பட்டும்!!

எதிர்கால இலங்கை கிரிக்கெட் வானில் தமிழர்கள் நாமமும் ஓங்கட்டும்!!!



# வெளிநாட்டுத் தலைவர்களின் இலங்கை வருகை








தாய்லாந்து ஜனாதிபதி யிங்லக் ஷினவத்ராவின் இலங்கை விஜயம்





உகண்டா ஜனாதிபதி யொவேரி மூசவேனி மற்றும் அவரது பாரியாரின் இலங்கை விஜயம்

# ஜனாதிபதியின் சீன விஜயம்








இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.